பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 20 புதன்கிழமை 05.07.2023 கதிர் 236

# உள்நாட்டு கடன் மறுசீரமைப்பால் வங்கிகளுக்கு ரூபா 97 பில். நட்டம்

## விளக்குகிறார் உதய கம்பன்பில எம்.பி.

உள்நாட்டுக்கடன் மறுசீரமைப்பின்மூலம் நாடாளவிய ரீதியில் உள்ள வங்கிகளுக்கு 97 பில்லியன் ரூபாவுக்கும் மேலான நட்டம் ஏற்பட்டுள்ளதாக பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

எத்துல் கோட்டேயில் உள்ள பிவித்துரு ஹெலஉறுமய கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வங்கி கட்டமைப்புக்கு பாதிப்பு ஏற்படாதெனஆட்சியாளர்கள்கூறினாலும்அமைச்சரவை பத்திரம் மற்றும் எண்ணக்கரு பத்திரங்களை ஆழமாக ஆராய்ந்து பார்க்கும்போது அதுபொய் என்பது தெளிவாக புலனாகின்றது.

ஜூன் 28 நிதியமைச்சர் அமைச்சரவையில் தாக்கல் செய்த அமைச்சரவை பத்திரத்தின் மூன்றாது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஈடுசெய்ய வேண்டிய இலங்கை அபிவிருத்தி பிணைமுறிகளின் பெறுமதி 886 மில்லியன் டொலர்கள் என்றுள்ளது.

இலங்கை மத்திய வங்கி அமைச்ச ☞ 2

## இனிது ரகசியம் அல்ல!

கட்சியின் தலைமைத்துவக் கூட்டத்தில் மற்றைய உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினால் அதற்கு உரிய பதிலை, தெளிவை வழங்கவேண்டியது தலைவர்களது கடமை. அதுதான் செய் நேர்த்தி. ஏனைய உறுப்பினர்களுக்கு இருக்கக்கூடிய சந்தேகங்களைத் தீர்த்து அவர்களுக்கு முழுத் தெளிவை வழங்கி அவர்களையும் அந்தத் திட்டத்திற்கு ஆதரவாளர்களாக மாற்றிக்கொள்ளவேண்டியதுதான் தலைவர்களின் திறமை. அதைத்தான் ஆளுமை என்று சொல்வார்கள்.

அதைவிடுத்து, சீனித்தொழிற்சாலைக்கும் ரெலோ தலைவர் மற்றும் பேச்சாளருக்கும் என்ன சம்பந்தம் என்று கட்சியின் தலைமைத்துவச் சபையில் கேள்வி எழுப்பப்பட்டால், அதற்கு காலைக்கதிர் பத்திரிகைதான் அதைத் தொடர்ந்து எழுதுகின்றது, அது சுமந்திரனின் பின்னணியில் இயங்கும் பத்திரிகை என்று சொல்வது பதில் இல்லை. பசப்பல். ☞ 2

## வடக்கில் 1843 பேருக்கு டெங்கு



வடக்கு மாகாணத்தில் 1,843 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்

வடக்கு மாகாண சுகாதார சேவை திணைக் களத்தில் நேற்று செய்தியாளர்களைச் ☞ 2

### கூட்டமைப்பு என்ற பெயரை கைப்பற்றும் முயற்சியில்

## தேர்தல்கள் ஆணைக்குழு முடிவை எதிர்த்து நீதிமன்ற படியேறுவோம்

### புளொட் தலைவர் சித்தார்த்தன் தெரிவிப்பு

(ந.லோகதயாளன்)

ஜனநாயகத்தமிழ்த்தேசியக் கூட்டணிக்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்புஎன்னும் பெயரைத் வழங்க மறுத்து தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்டதீர்மானத்திற்கு எதிராக நீதிமன்றை நாடவுள்ளதாக அக் கூட்டணியின் இணைத் தலைவர்களில் ஒருவரான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் ஆங்கிலப் பதமாகப் பயன்படுத்தி வரும் ரிஎன்ஏ (TNA) என்பதையே தமது ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் பெயராக மாற்றித்தரும்படி அந்தக் கட்சியின் செயலாளர் ஆர்ஆர் எனப்படும் ஆர்.ராகவன் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பித்திருந்தார். அதாவது தமது கட்சியின் ஆங்கிலப் பதமான டிரிஎன்ஏ என்பதில் உள்ள ''ஜனநாயகம்'' என்பதைக் குறிக்கும் டி என்ற எழுத்தை நீக்கிவிட்டு ரிஎன்ஏ என்பதை மட்டும் பயன்படுத்த ☞ 2

## உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்கான முதல் படியை தொடக்கினார் ரணில்

### வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புதீர்மானம்நிறைவேற்றப்பட்டதை அடுத்து ஜனாதிபதியும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரும் என்றவகையில் ரணில் விக்கிரமசிங்கவினால் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பத்திரங்கள் கட்டளைச் சட்ட விதிகளின் கீழ் வெளியிடப்பட்ட குறித்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் பொதுக் கடன்பதிவாளர் ஆகியோருக்கு ஜனாதிபதியால் அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, மாற்றலிற்கு அல்லது பரிவர்த்தனைக்கு அவசியமாயமைகின்றவாறான திறைசேரி முறிகளின் அத்தகையதொரு ☞ 2

## சீனித் தொழிற்சாலை பற்றிய கேள்விகளுக்கு ரெலோ பதிலளிக்கவேண்டும் - பிரேமச்சந்திரன்

வவுனியா மாவட்டம் நைனாமடுவில் அமையவுள்ள சீனித்தொழிற்சாலைத் திட்டத்துடன் ரெலோவுக்குத் தொடர்புகள் இருந்தால், அந்தத் திட்டம் தொடர்பாக எழுந்துள்ள பல்வேறு கேள்விகளுக்கும் அந்தக் கட்சி பதிலளிக்கவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார் ஈபிஆர்எல்எவ் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

யாழ்ப்பாணத்தில்நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

சீனித் தொழிற்சாலை தொடர்பாக அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை அனுமதி கிடைத்தாலும் இந்தத்திட்டம் வருமா வராதா என்கிற பெரும் கேள்வி உள்ளது. ஏறத்தாள 400 முதல்500மில்லியன்டொலர் பெறுமதியான முதலீடாக இது பேசப்படுகின்றது. அதில் சீனித் தொழிற்சாலை உருவாக்குவதற்கு 100 மில்லியன் டொலர் செலவிடப்படும். அவ்வளவுபெரிய உற்பத்தி ஆலைக்கு ☞ 2

### கடன் மறுசீரமைப்பின் பின்னரும்

## சிக்கலான சூழல் ஏற்படும் பிட்ச் ரேட்டிங் எச்சரிக்கை

உள்நாட்டு கடன் மறுசீரமைப்புதொடர்பில்அரசாங்கம் முன்வைத்துள்ள திட்டமானது, வங்கிக் கட்டமைப்பு, இறையாண்மை முறிகள் ஆகியவற்றை மறுசீரமைப்பது தொடர்பில் நிலவிய நிலையற்ற தன்மையை போக்குவதற்கு காரணமாக அமைகின்றபோதும், மேலும் சிக்கலான சூழல் ஏற்படலாம் என்றுபிட்ச்ரேட்டிங்நிறுவனம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் அந்நிறுவனம் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வங்கிகள் கொள்வனவு செய்துள்ளபிணையங்களை மறுசீரமைப்புக்கு உட்படுத்தாது இருத்தல், ரூபாவின் பெறுமதி குறைவடைதல், ஆகியன கடன்கள் மீதான அழுத்தங்களைத் தணிப்பதற்குகாரணமாகஅமையும்.

வங்கிகள் கொள்வனவு செய்துள்ள திறைசேரிப் பத்திரங்கள் மறுசீரமைக்கப்படும்என்றுதாம்எதிர்பார்க்காத போதிலும், திறைசேரி முறிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

உள்நாட்டுசட்டங்களுக்கு உட்பட்டு நிர்வகிக்கப்படுகின்ற வெளிநாட்டு ☞ 2

## குருந்தூர்மலையில் நீதிபதியிடம் வாங்கிக்கட்டினார் சரத்வீரசேகர



முல்லைத்தீவு, தண்ணிமுறிப்பு - குருந்தூர் மலையில் மேலதிகமாக மேம்படுத்தல்வேலைகள்மேற்கொள்ளப்படுகின்றதா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக முல்லைத்தீவு நீதிமன்ற நீதிவான் ரி.சரவணராஜா நேற்று செவ்வாய்க்கிழமை அங்கு நேரடியாகச் சென்றிருந்தார். அப்போது அங்கு வந்து விசாரணைகளில் தலையிட முயன்ற நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர வகையாக வாங்கிக் கட்டிக்கொண்டார்.

நீதிமன்ற உத்தரவுக்குப் பின்னரும் குருந்தூர் மலையில் கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டன என்ற குற்றச்சாட்டுத் தொடர்பில் ஆராய்வதற்காக ☞ 2

## ரணிலின் அழைப்பை மீள நிராகரித்தது எதிர்க் கட்சி

இணைந்து பணியாற்ற வருமாறு ஜனாதிபதி மீண்டும் விடுத்த அழைப்பை நிராகரித்தது ஐக்கிய மக்கள் சக்தி.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இணைந்துபணியாற்றுவதற்கான பகிரங்க அழைப்பு தொடர்பில்பதிலளிக்கும்வகையில் நேற்று நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தது.

அந்தச் செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய கட்சியின் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:

திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்ததாவது:

நாம் எதற்காக இந்த ஆட்சிக்கு ஆதரவளிக்க வேண்டும்? நாட்டை வங்குரோத்தடையச் செய்த தரப்பினருடன் ☞ 2

## காணி சுவீகரிப்புக்கு மண்டைதீவில் எதிர்ப்பு

ந.லோகதயாளன்.

மண்டைதீவுக் காணிகளை கடற்படைக்கு சுவீகரிக்கும் நடவடிக்கையை நாம் எதிர்ப்போம் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டம் வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவின், மண்டைதீவு கிழக்கில் (J/07) உள்ள, 29 பேருக்குச் சொந்தமான 18 ஏக்கருக்கும் அதிகமான தனியார் காணிகளை, வெலுசுமன கடற்படை முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கும் நோக்கில், எதிருவரும் 2023. 07.12 ஆம் திகதி அளவீட்டுப் பணிகளைத் தொடங்கப் போவதாக நில ☞ 2

## குருந்தூர்மலை குறித்த பதில் அறிக்கையை சமர்ப்பிக்க முல்லைத்தீவு நீதிவான் உத்தரவு



முல்லைத்தீவு, தண்ணிமுறிப்பு - குருந்தூர்மலை விவகாரம் தொடர்பான வழக்கு பொலிஸார் மற்றும் தொல்லியல் திணைக்களத்தினரின் பதில் அறிக்கைகளை ஒகஸ்ட் 8 சமர்ப்பிக்குமாறு மாவட்ட நீதிபதி உத்தரவிட்டார்.

குருந்தூர்மலை தொடர்பான வழக்கில் ☞ 2

## விசேட மருத்துவர்களுக்கு பற்றாக்குறை நாடு முழுவதும் சிகிச்சைகளில் பாதிப்பு

விசேட மருத்துவர்களின் பற்றாக்குறை காரணமாக நாடளாவிய ரீதியில் உள்ள சில வைத்தியசாலைகளில் சிகிச்சைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர், வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்ததாவது:

பிரதான வைத்தியசாலைகளிலும்விசேடமருத்துவர்களின்பற்றாக்குறைநிலவுகின்றது. இதற்கு இரண்டு காரணங்கள் காணப்படுகின்றன.

குறிப்பாக, விசேட ☞ 2

## ஜனாதிபதிக்கான அடுத்த தேர்தலில் ரணிலைக் கைகழுவியது பெரமுன

ஜனாதிபதி புதிய தாராளமயமாக்கல்கொள்கையில் பயணிக்கிறார். அந்தக் கொள்கையுடன்எமக்குஉடன்பாடில்லை. அதனால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சி தனது வேட்பாளரைத் தனியாக நிறுத்தும் என்று பொதுஜனபெரமுனவின் பொதுச்செயலாளர் சட்டத்தரணிசாகரகாரியவசம்தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதிரணில் ☞ 2

## 35இலட்சம் மின் பாவனையாளர்களின் மின்கட்டணத்தில் 55 சதவீத சலுகை

### அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மின் கட்டண திருத்தத்தின் போது வழிபாட்டுத் தலங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டிருந்ததென சுட்டிக்காட்டிய அமைச்சர், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களை ஆரம்பிப்பதற்கு தகுந்த சூழல் உருவாகியுள்ளதெனவும் தெரிவித்தார்.

'ஸ்திரமான நாட்டிற்கு, அனைவரும் ஒரே வழிக்கு' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர்கள் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் ☞ 10

## பொருளாதாரச் சேதங்கள் ஜேவிபியாலும் ஏற்பட்டன

### பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் பாய்ச்சல்

ஜேவிபியாலும்பொருளாதாரத்திற்குகடந்தகாலங்களில் இழப்பு ஏற்பட்டது. அவர்கள் அரச சொத்துக்களை தீயிட்டு எரித்ததால் இந்தச் சேதம் ஏற்பட்டது என்று பொது ஜன பெரமுனவின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்த தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

முழுப் பூசணிக்காயைச் சோற்றுக்குள்மறைக்களடுக்கப்படும் முயற்சி.

இந்த விடயத்தில், தன் மீதான தனிப்பட்ட பகை காரணமாகவேகாலைக்கதிர் இந்தவிடயத்தைத்தொடர்ந்து எழுதுவதாகச் சொல்வது கையாலாகாத்தனம். அப்படிப்பட்ட என்ன தனிப்பட்ட பகைஇருக்கின்றதுஎன்பதை சுரேனால் பகிரங்கமாகச் சொல்ல முடியுமா? தனிப்பட்டபகைக்கானஒரேயொரு அடிப்படைக்காரணத்தையாவது, முகாந்திரத்தையாவது அவரால்அடையாளம்காட்ட முடியுமா?

பொது அரசியலுக்கு வந்துவிட்டால் மக்களிடம் இருந்து கேள்விகள் வரும். அந்தக் கேள்விகளை உரியவர்களிடம் கொண்டு சென்றுசேர்ப்பதும்தலைவர்களின் தகிடு தத்தங்களை மக்களிடம் கொண்டு சென்று சேர்ப்பதும்தான் பத்திரிகையின்பணி. அதைச் செய்வதற்கு தனிப்பட்ட பகைதேவையில்லை. சுரேனுடன் தனிப்பட்ட பகை கொள்ளுமளவிற்கு காலைக்கதிருக்கு அவருடன் எந்தக் கொண்டல்கொடுத்தல்களும் இருந்ததில்லை. அப்படியிருக்கஅவர்தன்மீதுகாலைக்கதிருக்குத் தனிப்பட்ட பகை இருப்பதாகக்கருதுவாரானால் அதுஅவரது கற்பனாவாதம்.

கட்சியின்தலைமைத்துவக் கூட்டத்திலேயேஅவருக்குஇது தொடர்பான பதிலளிக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் காலைக்கதிர் அறிந்தே இருக்கின்றது. காலைகதிர் மட்டுமல்ல, ஜனநாயகக் கூட்டணிக்கு ஆதரவான குணா கவியழகன் போன்றவர்களும் வேறு சில மூத்த பத்திரிகையாளர்களும்கூட இந்த விடயத்தில் ரெலோவைக்கிழித்துத்தொங்கவிட்டிருக்கின்றார்கள் என்பதும் கூட்டத்தில்சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. இனியாவது தவறுகளைச் சுட்டிக்காட்டினால் அவரது பின்னணிப் பத்திரிகை, மஞ்சள்பத்திரிகை, நீலப் படம் என்ற வகையில் கருத்துச்சொல்வதை சுரேன் நிறுத்திக்கொண்டால்நல்லது.

நாங்கள்சொல்வதில்தவறிருந்தால் அது தொடர்பான விளக்கத்தை, தெளிவுபடுத்தலைக்கொடுங்கள். அவற்றை அப்படியேவரிக்குவரிவெளிப்படுத்த நாம்தயாராகவே இருக்கின்றோம். எங்களுக்கு அந்த விளக்கங்களில் மாற்றுக் கருத்திருந்தால் அது பற்றியும் குறிப்பிடுவோம். அதுதான் ஆரோக்கியமான மக்கள் அரசியலுக்கு அழகு. அதைவிடுத்து மூன்றாந்தர அரசியல் விமர்சனங்களுக்குப் பின்னால்போய் பதுங்கிக்கொண்டு உங்களை மலினப்படுத்திக்கொள்ளாதீர்கள்.

ரெலோவின் தலைமைத்துவக் கூட்டத்தில் சீனித் தொழிற்சாலையை ஏன் கொண்டு வரப்படக்கூடாது என்பது தொடர்பிலும் அந்தத் திட்டத்திற்கு வடக்கு மாகாண சபையில் ஏற்கனவே எத்தகைய எதிர்ப்புக் காட்டப்பட்டது என்பதும் கூட விளக்கமாக எடுத்துக்கூறப்பட்டுள்ளது. 2016ஆம் ஆண்டே இந்தத் திட்டத்தை வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் முழுமையாக நிராகரித்திருந்தார் என்பது எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

அப்போது மற்றொரு விடயமும் அங்கு சபைக்கு வந்திருக்கிறது. இந்தத் திட்டத்தை வடக்கில் செயற்படுத்துவதற்கான சூழலை ஏற்படுத்திக்கொடுப்பதற்காக2 கோடிரூபா முகவர்ப் பணம் வழங்கப்பட்டது குறித்தும் அந்தப் பணத்தில் யாழ்ப்பாணம் திண்ணை சொகுசு விடுதியில் விருந்துபசாரம் வழங்கப்பட்டது குறித்தும் அப்போதே அரசல் புரசலாகக் கதைகள் அடிபட்டதுஎன்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இப்படிப் பழைய கதைகள்எல்லாம்கிண்டிக்கிளறுப்படத்தொடங்கியதும், அப்படியென்றால் இந்தத் திட்டம் அம்பாந்தோட்டைக்கோ அல்லது வேறு பகுதிகளுக்கோ கொண்டு செல்லப்பட்டுவிடும் என்று மிரட்டியேனையவர்களை அடக்கப் பார்த்திருக்கிறார் சுரேன். ஆனால் அங்கு யாரும் அவரதுகருத்துக்குமசிவதாகத் தெரியவில்லை.

இதில் வேடிக்கை என்னவென்றால், சுரேன் சொல்வதைப் போல இந்தத் திட்டத்தை நாட்டின் வேறு பகுதிக்குக்கொண்டுசெல்லமுடியும் என்றால் கடந்த 7 வருடங்களில்அதனைஏன்தெற்கின் ஆட்சியாளர்கள் செய்யவில்லை? நான்காவது தடவையாகவும் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்து இந்த விடயத்தை வடக்கில் ஒப்பேற்றுவதற்கு அவர்கள் காத்திருக்கிறார்கள்? சுரேன்தான்இந்தக்கேள்விகளுக்கும் பதில் சொல்லவேண்டும்.

அனேகமாக ஜூலை 19 மீண்டும்நடக்கவுள்ளரெலோவின் தலைமைத்துவச் சபைக் கூட்டத்தில் இந்தக் கேள்விகளுக்கும்அவர்பதில் சொல்லக்கூடும். ஞாயிற்றுக் கிழமை நடந்த கூட்டத்தில் சீனித்தொழிற்சாலைத்திட்டத்திற்கும் ரெலோவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று தலைவர் செல்வம் அடைக்கலநாதன் திடமாக வலியுறுத்தினார். அப்படியென்றால் தனிப்பட்ட ரீதியில் அவருக்கும்சுரேனுக்கும்தான்தனிப்பட்டரீதியில்இந்தத்திட்டத்தில் தொடர்பிருக்கின்றதா? வடக்கு மாகாண சபை பொருத்தமற்றதுஎன்றுநிராகரித்ததை வடக்குமக்களின்மீதும்மண் மீதும் திணிப்பதில் அப்படி அவர்கள் இருவருக்கும் என்னஆர்வம்இருக்கின்றது? எதற்காக மக்களை இப்படிப் பழிவாங்க நினைக்கிறார்கள்? அடுத்த கூட்டத்தில் இந்தக் கேள்விகளுக்கும் அவர்கள் பதிலளித்தால் நன்றாக இருக்கும்.

இந்தக்கூட்டம்நடந்துமுடிந்த கூட்டோடுதலைவர்செல்வம் திங்கட்கிழமை வவுனியாவில்நடத்தியசெய்தியாளர் மாநாட்டில், சீனித்தொழிற்சாலை குறித்து யாரும் குத்தி முறியவேண்டாம் என்று தெரிவித்திருந்தார். அதில் அவர் மற்றொரு முக்கிய விடயத்தையும் கூறியிருந்தார். அதாவது, ரெலோ ஒரு போராட்டஇயக்கம், அதுவடக்கில் சிங்களக் குடியேற்றங்களை அனுமதிக்காது எதிர்க்கும் என்று தெரிவித்திருக்கிறார்.

''நாம் ஒரு போராட்ட இயக்கம். நிச்சயமாகசிங்கள குடியேற்றங்களையும் எதிர்ப்போம்" என்றிருக்கிறார். உண்மை அதுதானா என் பதை அவர் நன்றாக யோசித்துப் பார்த்திருக்கவேண்டும். இதே செல்வம் அடைக்கலநாதனும் மற்றுமோர் நாடாளுமன்ற உறுப்பினரான திலீபனும் வவுனியாமாவட்டச்செயலகத்திலே மாவட்ட மேலதிகச் செயலர்திரேஸ்குமார்தலைமையில் இடம்பெற்ற ஒரு கூட்டத்தில் அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள இரு சிங்களக்குடியேற்றக்கிராமங்களைவவுனியாவடக்குடன் இணைப்பதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள் என்பதை செல்வம் இந்தத் தருணத்தில் மறந்துவிட்டார்.

அனுராதபுரம் மாவட்ட எல்லைப்பகுதியானபொபஸ் வேவாவில் உள்ள இரு சிங்களக் கிராமங்களை வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுடன் இணைக்க இவர்கள் இருவரும் இருந்த கூட்டத்தில்தான் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இரு கிராமத்திலும் மட்டும் ஆயிரத்து 200 குடும்பங்கள்உள்ளனர். இந்த ஆயிரத்து 200 குடும்பத்தில் ஒரு குடும்பங்கூட தமிழ்க் குடும்பமே கிடையாது0 அத்தனையும் சிங்களக் குடும்பங்கள். இந்தஆயிரத்து 200 குடும்பங்களில் 3,800றக்கும். மேற்பட்ட வாக்காளர்கள் உள்ளனர்.

2020ஆம் ஆண்டு இடம்பெற்றநாடாளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிட்ட சிங்கள வேட்பாளர் ஒருவர் வெறுமனே 686 வாக்குகள் வித்தியாசத்திலேயே தோல்வியடைந்திருந்தார். இந்த நிலையில் அரசின் சிங்களக் குடியேற்றங்களை வவுனியாவுடன் இணைக்க ஒப்புதல் அளித்தால் அந்த நாடாளுமன்ற உறுப்பினர் இடமும் பறிபோகும் என்பது கூடவா செல்வம் அடைக்கலநாதனுக்குத் தெரியாது?

இதேநேரம் 2021 ஆம் ஆண்டு வடக்கின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்பமிட்டு இதே பொபஸ்வேவாவை வவுனியாவுடன் இணைக்கவேண்டாம் என ஓர் கோரிக்கை கடிதத்தினை நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ்நிர்மலநாதனின் ஏற்பாட்டில் வழங்கினர். அந்தகடிதத்திலும்இதே செல்வம் அடைக்கலநாதனும். ஒப்பமிட்டார். அப்படியிருந்தும் இன்று அந்தக் கிராமங்களை வவுனியாவுடன்இணைக்கஅவர்எந்த எதிர்ப்புத் தெரிவிக்கவேயில்லை. அது பற்றி இன்று வரை அவர் பகிரங்கமாக எதுவும்பேசியதும் இல்லை. அப்படியிருக்க நாம் போராட்டஇயக்கம்சிங்களக்குடியேற்றங்களைஎதிர்ப்போம்என்று கூறுவது எவ்வளவு பெரிய பொய்?

**இடிமின்னல்**
(idiminnal23@gmail.com)

## காணி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளவைத் திணைக்களத்தினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இந்த அளவீட்டுப் பணிகளை தடுத்து நிறுத்துவதற்காக, மக்கள் பிரதிநிதிகள், காணி உரிமையாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அன்றைய தினம் (12) காலை.7.30 மணியளவில் மண்டைதீவு கிழக்கில் நடைபெறவுள்ள எதிர்ப்புப் போராட்டத்தில் இணைந்துகொள்ளுமாறும் அழைப்பு விடுக்கின்றேன் - என்றார்.

## ஜனாதிபதிக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்கநெருக்கடியான நிலைமையின்போதே அப்பதவியை ஏற்றுக்கொண்டார். அவர்கோட்டாபயராஜபக்ஷவின் எஞ்சிய பதவிக் காலத்தினை முன்னெடுப்பதற்கே எம்மால் நியமிக்கப்பட்டார். அதனை விடவும் அவருக்கும் எமக்கு எவ்வித மான இணக்கப்பாடுகளும் எட்டப்பட்டிருக்கவில்லை.

ஜனாதிபதிரணில்விக்கிமசிங்கபுதியதாராளமயமாக்கல் கொள்கையில் பயணிக்கின்றார். இந்தக் கொள்கையே நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு உதவும் என்று சஜித் பிரேமதாசவும் கூறுகின்றார். இதனால் ஜனாதிபதி ரணில்தனக்கு பின்னர் சஜித் பிரேமாசவை கைகாண்பித்துச்செல்ல முடியும். அந்த விடயம் பற்றி எமக்கு எதுவும் தெரியாது.

எம்மைப் பொறுத்தவரையில் எமக்கென்று கொள்கையொன்று உள்ளது. அதற்கு மக்கள் ஆணை அளித்துள்ளார்கள். ஆகவே அந்தக்கொள்கைக்கு மாறாக எம்மால் செல்ல முடியாது.

அந்த அடிப்படையில், குறித்தபுதியதாராளமயமாதல் கொள்கையுடன் எமக்கு உடன்பட்டுச்செல்லமுடியாது. அதில் நாம் தெளிவாக உள்ளோம். ஆகவே ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டதும், எமது வேட்பாளரை நாம் அறிவிப்போம்.

அவர்யாராகஇருந்தாலும் எமக்கு பிரச்சினையில்லை. எமது கொள்கைகளையும், போருக்கு பின்னரான சூழலையும்புரிந்துகொண்டு நாட்டின் அபிவித்தியை முன்னெடுப்பவராக இருக்க வேண்டும். அவ்வாறான ஒருவரை நாம் முன்னிறுத்துவோம் - என்றார்.

## உள்நாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரவைக்கு முன்வைத்துள்ள யோசனையின் 29ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இந்த பிணைமுறிகளின் பெறுமதியில் 30 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும். அப்படியானால், 81.6 பில்லியன் ரூபா மூலதனம் தள்ளுபடிசெய்யப்படவுள்ளது.

இலங்கை அபிவிருத்தி பிணைமுறிகளில் 85 சதவீதமான பங்குகள் உள்நாட்டு வங்கிகளுக்கே உள்ளன. மூலதனம்தள்ளுபடிசெய்யப்படுவதன் மூலம் மாத்திரம் உள்நாட்டு வங்கிகளுக்கு 69 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படும்.

அரசநிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள 323 மில்லியன்டொலர்கடனில் 30சதவீதம் தள்ளுபடி செய்யப்படவுள்ளது. பிணைமுறி மற்றும் டொலர் கடன் ஆகிய இரண்டிலும் மூலதனம் தள்ளுபடிசெய்யப்படுவதால், மாத்திரம் உள்நாட்டு வங்கிகளுக்கு 97 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படும். இதனை தவிரவட்டியிலும் 35சதவீதம் குறைக்கப்படுகிறது.

அப்படியானால், கடன் மறுசீரமைப்பின் மூலம் தேசியவங்கிகளுக்குஏற்படும் நஷ்டம் 97 பில்லியன் ரூபாவுக்கும் மேல் காணப்படுகின்றது. இந்த விடயம் பொது மக்களுக்கு மறைக்கப்பட்டுள்ளது -என்றார்.

## சிக்கலான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாணயங்களைப்பயன்படுத்தி வங்கிகள் கொள்வனவு செய்துள்ள அபிவிருத்தி முடிறிகள் மீது, எதிர்பாராத அழுத்தங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

அதுமட்டுமன்றி,சர்வதேச இறையாண்மை முறிகள் மீதும் இலங்கைக்கு அடுத்து வரும்காலத்தில்அழுத்தங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளதாக நம்பப்படுகின்றது - என்றுள்ளது.

## தேர்தல்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஏற்கனவேரிஎன்ஏஎன்ற பெயரில்நீண்டகாலமாகவே ஓர் அரசியல் கூட்டு செயற்பாட்டில் இருப்பதால் அந்தப் பெயரைஒத்ததாகஜனநாயகக் கூட்டணியின்பெயரைமாற்ற அனுமதிக்க முடியாது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானம் எடுத்திருந்தது.

இதுதொடர்பில்கருத்துத் தெரிவித்த புளொட் தலைவர் சித்தார்த்தன், தேர்தலகள் ஆணைக்குழுவின் முடிவை எதிர்த்து நீதிமன்றத்தை நாடுவோம் என்றார்.

"அந்த பெயரை எமக்கு வழங்குமாறு நாம் எழுத்தில் போரிக்கை விடுத்தோம். அதனைதேர்தல்கள்ஆணைக்குழு மறுத்துள்ள நிலையில் அடுத்த கட்டமாக நீதிமன்றினை நாடவுள்ளோம்" என்றார்.

இதேவேளை, இவ்வாறு பெயலை மாற்றுமாறு ஜனநாகத்தமிழ்த்தேசியகூட்டணி விண்ணப்பித்ததாக வெளிவந்த செய்தியில் உண்மைஇல்லைஎனமற்றுமோர்இணைத்தலைவரான செல்வம் அடைக்கலநாதன் வவுனியாவில்திங்கட்கிழமை செய்தியாளர்களிடம்தெரிவித்திருந்தார்.

## சீனித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிகப் பெருமளவிலான கரும்பு நாளாந்தம் தேவை. அவ்வாறானபெருந்தொகைக் கரும்பை உற்பத்தி செய்யக் கூடிய வல்லமையில் வன்னி நிலம் இருக்கின்றதா? அதற்கான மனித வலு அங்கு இருக்கின்றதா? போன்ற பல கேள்விகள் இருக்கின்றன.

இந்தத் தொழிற்சாலையை உருவாக்கப் போகிறவர்கள் தாய்லாந்தில் இருந்துவருகின்றநிறுவனம் என்று சொல்லப்படுகின்றது. அவர்கள் நிச்சயமாக முதலீடு செய்யப்போகிறவர்கள் இல்லை. தொழிற்சாலையை உருவாக்குவதற்கானதொழிலட்நுப்பப் பங்காளிகளாகத்தான் இருப்பார்கள். அந்த நிறுவனம் பல நாடுகளில் சீனித் தொழிற்சாலையை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

அப்படியானால் முதலீட்டைக்கொண்டுவருவது யார் என்பதுதான் இருக்கக்கூடிய கேள்வி. தாய்லாந்துநிறுவனம் நிச்சயம் முதலிடுவதற்குத் தயாராக இல்லை. ஆகவே வேறுயாராவதுதான் முதலீடு செய்யவேண்டும். எங்கிருந்து முதலீடு வரப்போகின்றது என்பது இதுவரை எங்கள் யாருக்கும் தெரியாது. முதலீட்டைச்செய்யப்போகின்றவர்கள் யார்? எவ்வளவு முதலீடு செய்ய இருக்கின்றார்கள்? எவ்வளவு பெரிய ஆலை உருவாக இருக்கின்றது? அது வன்னி மண்ணுக்குப் பொருத்தமானதா? 30 ஆயிரம் 40 ஆயிரம் ஏக்கர் கரும்புச் செய்கைக்கு அந்த மண்ஏற்புடையதா? அதற்குத் தேவையான தொழிலாளர்கள் அங்கு இருக்கிறார்களா? தொழிலாளர்கள் போதாதெனில் எங்கிருந்து தொழிலாளர்கள் கொண்டுவரப்படுவார்கள்? அவர்கள் யார்? அவர்கள்எந்தப்பிரதேசத்தைச் சார்ந்தவர்கள்?

இந்த தாய்லாந்து நிறுவனத்திற்கான இலங்கை முகவர்களாக யார் செயற்படுகிறார்கள்? நான் அறிந்தவரையில் ஒரு பெண்ணும் ஒரு ஆணுமாக இரு முஸ்லிம்கள்தான் இலங்கை முகவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகின்றது. இத்தகைய பல கேள்விகளுக்குப்பதில் காணப்படவில்லை. எனவே இதில் ரெலோவைக் குற்றஞ்சாட்டுவதில் அர்த்தம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஏனெனில் இந்தக்கேள்விகளுக்கெல்லாம் மக்களுக்குப் பதில் தேவை.

என்னைப் பொறுத்தவரை இந்தத் திட்டம் நடைமுறைக்கு வருமா என்பது ஒரு பெரும் கேள்விக்குரியவிடயமாகஇருக்கின்றது. இந்தத் திட்டத்திற்கு ஏற்கனவே 3 முறை அமைச்சரவைப் பத்திரம் கொண்டு வரப்பட்டதாக செல்வம் அடைக்கலநாதன் கூறியிருக்கிறார். இந்த நான்காவது முறையும் ஏற்கனவே மூன்று முறை நடந்தது போலவே அமைச்சரவைப் பத்திரம் காலாவதியாகிப் போகுமா என்பது தெரியாது. ரெலோவுக்கு அதில் ஏதும் உருப்படியான தொடர்புகள் இருந்தால் அதை அவர்கள் மக்களுக்குத் தெளிவுபடுத்துவார்கள். ஆனால் இது நிறைவேறக்கூடிய ஒரு திட்ட முன்மொழிவாக எனக்குத் தெரியவில்லை - என்றார்.

## குருந்தூர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நீதிபதி அங்கு சென்றிருந்தார். அப்போது அந்தப் பகுதிக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெர முன வின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவும் வருகை தந்திருந்தார்.

நீதிபதி ரி.சரவணராஜா வழக்குத் தொடர்பான விசாரணைகளை இரு தரப்பு சட்டத்தரணிகளுடனும் இணைந்துமேற்கொண்டிருந்தபோது இடையே குறுக்கிட்ட சரத் வீரசேகர தன்னை அறிமுகப்படுத்தித் தானும் அங்கு கருத்துத் தெரிவிக்க முற்பட்டார்.

அவரது கருத்தை ஏற்க மறுத்த நீதிவான், நாடாளுமன்ற உறுப்பினர்களோ, அரசியல்வாதிகளோ இங்கு கருத்துத்தெரிவிக்க முடியாது எனவும், இங்கு நீதிமன்ற விசாரணையே இடம்பெறுகின்றது எனவும், அங்கிருந்து சரத் வீரசேகரவை விலகிச் செல்லுமாறும் எச்சரித்தார்.

அதனைத் தொடர்ந்து சரத் வீரசேகர அங்கிருந்து விலகிச் சென்றிருந்தார்.

## ரணிலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டிணைந்து செயற்படுவதற்கு எமக்கு அழைப்பு விடுக்கப்படுமாயின், அது பெரும்நகைச்சுவையாகும்.

எம்முடன் இணைந்து செயற்படுவதற்கு முன்னதாக மக்கள் ஆணைக்கு மதிப்பளிக்க வேண்டும். ஒன்றிணைந்துசெயற்படுவதற்கு முன்னதாக மக்கள் வாக்களிப்பதற்கான உரிமைக்குஇடமளிக்கவேண்டும் - என்றார்.

நளின்பண்டாரதெரிவிக்கையில், மொட்டுக்கட்சியின் ஊன்றுகோலகச் செயற்படவேண்டிய அவசியம் எமக்கு இல்லை. ராஜபக்ஷ திருடர்களுடன் இருக்கும்ஒப்பந்தத்தினை உடன் நிறுத்தி ஜனாதிபதி நாடாளுமன்றத்தினை உடன் கலைக்க வேண்டும் - என்றார்

ரஞ்சித்மத்தும பண்டார தெரிவிக்கையில், ஜனாதிபதி இதேபோன்று முன்னரும்அழைப்புவிடுத்துள்ளார். அப்போது நாம் கலந்துரையாடலுக்கு வருகைதருமாறு கோரினோம். ஆனால் அவர் அதற்கு வருகைதரவில்லை. தற்போதும் அவர் அவ்விதமான கோரிக்கையையே விடுக்கின்றார்.

சரியான வேலைத்திட்டம் இருக்குமாயின் கலந்துரையாடுவதற்கு நாம் தயாராகவே உள்ளோம். ஆனால் எதிர்க்கட்சியை தற்போது அழைப்பது உள்நோக்கத்தினைக் கொண்டதாகும். ஆகவே அதுபற்றி ஆராய வேண்டும் என்றார்.

எஸ்.எம்.மரிக்கார் தெரிவிக்கையில், ராஜபக்ஷக்கள் உள்ளிட்ட அவர்களது அணியிருக்குவிடயங்கள்புரிவதில்லை. ஜனாதிபதி தற்போது எம்மைஅழைத்துதம்முடன் இணைந்துபணியாற்றுமாறு கோருகின்றார். இதன்அர்த்தம் அடுத்த ஜனாதிபதி சஜித் பிரேமதாசவே என்பதை காண்பித்துச் செல்வதற்காகும். இந்த விடயத்தினை புரிந்துகொள்ளாது மொட்டுக்கட்சி இருக்கின்றது - என்றார்.

## விசேட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவர்கள்நாட்டைவிட்டு வெளியிறுகின்றமைமற்றும், விசேடவைத்தியநிபுணர்கள் ஓய்வு பெறவுள்ளமை இதற்கான காரணமாக இருக்கின்றது.

இந்த நிலைமைகள் நீடித்தால் சுகாதாரத்துறையில் வைத்தியர்கள் சேவை வழங்குவதில் நெருக்கடிகளை முகங்கொடுப்பதற்கு நேரிடும்அபாயநிலைமைகள் ஏற்படும் - என்றார்.

இதேவேளை, சுகாதார அமைச்சின் செயலாளர் இதுகுறித்துதெரிவித்ததாவது:

ஜூலை 30 ஆம் திகதிக்குள் சுமார் 30 விசேட வைத்திய நிபுணர்கள் ஓய்வு பெறவுள்ளனர். தற்போது நிலவும் வைத்தியர் பற்றாக்குறைக்குத் தீர்வாக தற்போதுஓய்வுபெற்றுள்ளவிசேட வைத்தியர்களை மீண்டும் பணிக்கு அமர்த்த முடியுமா என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருகிறது.

அத்துடன், விசேட வைத்தியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை 63ஆக அதிகரிப்பதற்கான அமைச்சரவைபத்திரம் இந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது - என்றார்.

## பொருளாதாரச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் இந்த நாட்களில் வெளிநாடுகளுக்கு அதிகமான பயணங்களைச்செய்கின்றாஜுகள். தற்போது அவர்கள் இலங்கையின் பொருளாதார பிரச்சினை பற்றி ஆஸ்திரேலியாலில் உரையாற்றுகின்றனர்.

அநுரகுமாரதிஸாநாயக்க அணிந்திருக்கும் காற்சட்டைகூட கட்சியின் தோழர்களால் வழங்கப்பட்டது என்று கூறும் மக்கள் விடுதலை முன்னணியின்நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது தலைவர் விமானங்களில் வர்த்தகவகுப்பில்பயணிப்பது பற்றி அக்கறை கொள்வது கிடையாது.

அநுரகுமாரதிஸாநாயக்க உள்ளட்ட அவரது குழுவினர் அந்த கட்சியின் உண்மையான, சாதாரண உறுப்பினர்களுக்குதுரோகம் செய்கின்றனர். இலங்கை பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட இழப்பினை உண்மையான மதிப்பீடு செய்ய வேண்டுமாயின் மக்கள் விடுதலை முன்னணி நாட்டில்சொத்துக்களுக்குஏற்படுத்தியஅழிவையும் கணக்கிட வேண்டும்

குறிப்பாக, அரச சொத்துகளைதீயிட்டுச்சேதப்படுத்திய செயற்பாடுகளைஅக்கட்சியே செய்தது. இந்த விடயத்தினையும் அக்கட்சியனர் வெளிநாட்டவர்களுக்கு தெரிவிக்க வேண்டும் - என்றார்.

## வர்த்தமானி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொகையினைக் கட்டளைச் சட்டத்தின்கீழ்உருவாக்குவதற்கும் வெளியிடுவதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடுமற்றும்தேசியகொள்கைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் பொதுப் படுகடன் பதிவாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

ஏதேனும் பங்கு அல்லது பிணையங்கள் தொடர்பில் இலங்கையில் நடைமுறையிலுள்ள எழுதப்பட்ட ஏதேனும்சட்டத்தின்தத்துவங்களின் பண்பினால் சகல சிறப்புரிமைகள், விலக்களிப்புக்கள் மற்றும் விடுபாட்டுரிமைகள் விடயத்திற்குஏற்ப மாற்றலில் அல்லது பரிவர்த்தனையில் இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்படுகின்ற ஏதேனும் புதிய பதிவு

செய்யப்பட்டபங்குத்தொகுதி அல்லது பிணையங்களுடன் இணைவதாக கருத்திற்கொள்ளப்படவேண்டுமெனவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஒழுங்குவிதிகளினால் அதிகாரமளிக்கப்பட்டவாறு திறைசேரி முறிகளின் உருவாக்கத்தில் மற்றும் வெளியீட்டில் கூறப்பட்ட ஏதேனும் செலவுகளைச் செலுத்துகின்ற நோக்கித்திற்கு அவசிய மாயமைகி ன்றவாறான அத்தகைய திறைசேரி முறிகளைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உருவாக்குவதற்கும்வெளியிடுவதற்கும் நிதி, பொருளாதாரஉறுதிப்பாடு மற்றும் தேசிய

கொள்கைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் பொதுப் படுகடன் பதிவாளருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

## பதில் அறிக்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
(AR/673/18),12.06.2022 இற்கு முன்னிருந்த நிலையைப்பேணுமாறும், அதற்கு மேல் கட்டுமானப் பணிகள் எதனையும் மேற்கொள்ளக்கூடாது எனவும் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் 19.07.2022 அன்று கட்டளை பிறப்பித்திருந்தது.

நீதிமன்றம் இவ்வாறு கட்டளைவழங்கியபிற்பாடும், நீதிமன்றக் கட்டளையை மீறி குருந்தூர்மலையில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

குறிப்பாக 23.02.2023 அன்று குருந்தூர்மலைக்குத் தண்ணிமுறிப்புப்பகுதியைச் சேர்ந்த தமிழ் மக்களும், தமிழ் அரசியல் பிரதிநிதிகள் சிலரும் சென்றிருந்தனர்.

அந்த விஜயத்தின் போது இவ்வாறு நீதிமன்றத்தின் கட்டளைகள் மீறப்பட்டு தொடர்ந்தும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுவதுஉறுதிசெய்யப்பட்டிருந்தது.

இவ்வாறு நீதிமன்றக் கட்டளைகள் மீறப்பட்டு தொடர்ந்தும்பௌத்தவிகாரை அமைக்கும் பணிகள் இடம் பெறுவது தொடர்பில் கள விஜயத்தில்ஈடுபட்டவர்களுள் ஒருவரானமுன்னாள்வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் அன்றையதினமே(23.02.2023) முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றும் செய்யப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து 02.03.2023 அன்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் புயூ/673/18 என்னும் வழக்கிலக்கத்தில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றக் கட்டளை மீறப்பட்டு கட்டுமானப் பணிகள் இடம்பெறுகின்றமை தொடர்பில் புகைப்பட ஆதாரங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு முறையீடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், அவ்வாறு குருந்தூர்மலையில் மேலதிகமாக மேம்படுத்தல் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது தொடர்பில்கண்காணிப்பதற்கு நேற்று (04.07.2023) முல்லைத்தீவு நீதிமன்ற நீதிவான்ரி.சரவணராஜாகள விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது குருந்தூர் மலையில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற மேம்படுத்தல் லேலைகள் தொடர்பில் நீதிவானால் ஆராயப்பட்டது.

அதேவேளை, பொலிஸார் மற்றும் தொல்லியல் திணைக்களம் இது தொடர்பான பதில் அறிக்கையை வழங்குவதற்காக எதிர்வரும் 08.08.2023 ஆம் திகதிக்குக் குறித்த வழக்கு நீதிவானால் திகதியிடப்பட்டது.

மேலும், நீதிவான் இன்று

தொடர்ச்சி 10 ம் பக்கம்

# மருந்து தட்டுப்பாட்டைநீக்க புதிய வேலைத்திட்ட வியூகம்

## அமைக்கிறார் சுகாதார அமைச்சர் கெஹலிய



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அறிவுரைக்கமைய நாட்டிற்குள் மருந்துப் பொருள்களுக்கான தற்பாடு ஏற்படாமல் இருப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு தற்போது முன்னெடுத்து வருகின்றதென சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

மருந்துப் பொருள்களின் பெறுகை செயற்பாடுகளை செயல்திறன் மிக்கதாக முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும், அதற்கமைய மருந்து பொருள்களின் தரம் தொடர்பில் தொடர்ச்சியாக அவதானம் செலுத்தத் தீர்மானித்திருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஸ்திரமான நாட்டிற்கு, அனைவரும் ஒரே வழிக்கு' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல -

இலங்கையின் மருத்துவத்துறை பற்றிய அவதானம் தற்காலத்தில் மேம்பட்டுக் காணப்படுவதாகவும் உலகளாவிய ரீதியிலும் பிராந்திய ரீதியிலும் இலங்கையின் வைத்தியத்துறைக்கான அர்ப்பணிப்புக்களுக்கு பாராட்டு கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தற்போது நாட்டில் காணப்படும் மருத்துவத்துறை தொடர்பிலான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் மற்றும் அந்த தீர்வுகள் இலவச மருத்துவத்துறையின் எதிர்காலத்தில் எவ்வகையில் தாக்கம் செலுத்தும் என்பது பற்றியும் அரசாங்கம் விசேட அவதானம் செலுத்தியுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கொவிட் பெருந்தொற்றுப் பரவல் காரணமாக முழு உலகத்தினதும் சுகாதாரச் செயற்பாடுகள் பெருமளவில் பாதிக்கப்பட்டதெனவும், கொவிட் தடுப்பூசிகளுக்காக இந்திய நிறுவனம் ஒன்றுக்கு 60 மில்லியன் டொலர்களை செலுத்தியிருப்பதாகவும் தெரிவித்த அமைச்சர், இந்தியாவிலும் கொவிட் தொற்று அதிகளவில் பரவ ஆரம்பித்ததன் விளைவாக மருந்து தயாரிப்பு நிறுவனம் நெருக்கடியான நிலைக்குத் தள்ளப்பட்டதாகவும் அதனால் 'சீரம்' நிறுவனம் இந்தியாவிலிருந்தே செல்ல வேண்டிய நிலைமை உருவாகியிருந்தாகவும் தெரிவித்தார்.

அதனால், செலுத்திய பணத்திற்கு ஊசிகளும் கிடைக்கவில்லை. பணத்தையும் மீளப்பெறமுடியாமல் போய்விட்டது எனவும். அன்று முதல் சுகாதாரத்துறை பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே முன்னோக்கிச் செல்வதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பொதுவாக மருத்துவ விநியோகத்துறைக்கு ஒரு வருடத்துக்கு அவசியமான பொருள்கள் முன்கூட்டியே கோரப்படும் என்பதோடு, ஒரு வருடத்துக்கு அவசியமான பொருள்களை களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் இயலுமையும் காணப்பட்டது. அந்தக் காலத்தில் நிதி நெருக்கடியும் காணப்படவில்லை. கொவிட் பரவல் காரணமாக விமான மற்றும் கப்பல் போக்குவரத்துச் செயற்பாடுகள் தடைப்பட்டமையால் நாடுகளிலிருந்து மேற்கொள்ளப்படும் பொருள்கள் பரிமாற்றச் செயற்பாடுகளும் முடங்கின. அந்த நேரத்தில் கொவிட் கட்டுப்பாட்டுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டமையால் மருந்துப் பொருள்களை களஞ்சியப்படுத்தும் செயற்பாடுகள் மீது அவதானம் செலுத்த முடியாமல் போயிருந்ததெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

கொவிட் பரவலில் இருந்து மீண்டு நாடு ஓரளவு சுமுகமான நிலைமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் வேளையில் பெரும் ஆரப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. அதனால் முழு நாடும் சக்கலான நிலைமையை எதிர்கொண்டிருந்தது. அதனால் பெறுகைச் செயற்பாடுகளிலும் தாமதம் ஏற்பட்டன. மருந்துப் பொருள்களை பெற்றுக்கொள்வதற்கான அனைத்து முயற்சிகளுக்கும் 9 மாதங்களை செலவிட வேண்டிய நிலைமை உருவாகியிருந்தாஜுகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சரவையில் விளக்கமளித்த பின்னர் நிலைமையை சரியான முறையில் விளங்கிக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நிதி அமைச்சுடன் கலந்தாலோசித்து மருந்து கொள்வனவுக்கு அவசியமான வேலைத் திட்டம் ஒன்றைப் பரிந்துரைத்தார். அதனால் சில பிரச்சினைகள் காணப்பட்டாலும் மருந்து தட்டுப்பாடு தொடர்பிலான நிலையை சீரமைக்க முடிந்துள்ளது. எவ்வாறாயினும் நிலைமைகளை சீரமைப்பதற்கான செயற்பாடுகள் தொடர்பிலான அறிக்கையொன்று சுகாதார அமைச்சால் அமைச்சரவைக்குச் சமர்பிக்கப்படவுள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தற்காலிகமாக ஏற்பட்டிருக்கும் மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்திப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. 19 புதிய மருந்து வகைகளை உற்பத்தி செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. அடுத்த காலண்டில் இன்னும் 17 மருந்துகளின் உற்பத்தி செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்படும். அதன் பின்னரான இரு வருடங்களில் 30 - 35 சதவீதம் வரையிலான மருந்துப் பொருள்களை உள்நாட்டில் உற்பத்திச் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

**கேள்வி:** 2021 ஆம் ஆண்டில் பல மில்லியன்கள் செலவில் ஆரம்பிக்கப்பட்ட மருத்துவ விநியோகத்துறையின் தகவல் கட்டமைப்பு முடங்கிப்போயுள்ளது. தற்போது 100 மில்லியன்கள் செலவில் அதனை மீள ஆரம்பிக்கப்படுவதற்கான அவசியம் யாது ?

**பதில் :** மேற்படி தகவல் கட்டமைப்பு முழுமையாக அழிந்துப்போய்விட்டது என்ற காரணத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. அதனால் அது பற்றிய விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அது தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தின் கோப் குழுவும் அதுபற்றி அறிவுறுத்தியுள்ளது. அது தொடர்பில் அவசியமான எந்தவொரு தீர்மானத்தையும் மேற்கொள்வதற்குப் பின்வாங்கப்போவதில்லை.

**கேள்வி:** : மயக்க மருந்து தொடர்பிலான பிரச்சினைகளை பேராதனை மற்றும் றாகமை வைத்தியசாலைகளில் காண முடிந்தது. அது தொடர்பிலான குழுவொன்று நியமிக்கப்பட்டு ஆராயப்படுவதாக கூறப்பட்டது. அதன் தற்போதைய நிலைமை யாது?

**பதில் :** இது தொடர்பில் பல்வேறுபட்ட நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. இவை தொடர்பாக பேராதனை சிறுவர் வைத்தியசாலை மற்றும் றாகமை போதனா வைத்தியசாலை பிரதான வைத்தியர்களால் தெளிப்படுத்தல்கள் வழங்கப்பட்டன.

பேராதனை வைத்தியசாலையில் மேற்படி ஊசியை பயன்படுத்தவில்லை என்பதை வைத்தியர்கள் உறுதிப்படுத்தியிருந்தனர். அது தொடர்பிலான முதற்கட்ட அறிக்கையும் கிடைத்துள்ளது. றாகமை வைத்தியசாலை தொடர்பிலான அறிக்கையும் எதிர்வரும் நாள்களில் கிடைக்கும். பிரச்சினைக்குரிய மயக்க மருந்துகள் பாவனையிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

**கேள்வி:** என்.எம்.ஆர். நாட்டிற்கு கொண்டு வரப்படும் மருந்துகளை பரிசோதிப்பதற்கான பணிக்குழுவும் ஆய்வுக்கூட வசதிகளும் போதியளவில் இல்லை என பிரதம நிறைவேற்று அதிகாரி கூறியுள்ளார். அவ்வாறாயின் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்படும் மருந்துகள் பரிசோதனை செய்யப்படாமல் மக்களுக்கு வழங்கப்படுகின்றனவா? இல்லாவிட்டால் அதிகாரிகள் பற்றாக்குறையா? ஆய்வுக்கூட வசதிகள் போதாமைக்கான காரணம் என்னவென கண்காணிக்கப்படவில்லையா?

**பதில் :** ஆய்வுக்கூட வசதிகளை உருவாக்குவதற்கான முயற்சிகள் தற்போதும் உலக சுகாதார ஸ்தானபத்துடன் கலந்தாலோசித்து நிபுணர்களின் ஆலோசனைகளுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மறுமுனையில் அரச மற்றும் தனியார்துறை இணைந்த வேலைத்திட்டம் பற்றி ஆலோசிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் இவ்வருட இறுதிக்குள் ஆய்வுக்கூட வசதிகளை மேம்படுத்துவதற்கு அவசியமான அறிவுரைகளை ஜனாதிபதி வழங்கியுள்ளார். (05)



# தேசிய கடன் மறுசீரமைப்பு சட்டமூலத்தை அரசாங்கம் பலவந்தமாக நிறைவேற்றியது

## திஸ்ஸ அத்தநாயக்க விரக்தி

அரசாங்கம் பலவந்தமாகவே தேசிய கடன் மறுசீரமைப்பு குறித்த சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொண்டுள்ளது.

இரவு 9 மணிக்கு பின்னரே வாக்கெடுப்பு நடத்தப்படும் எனக் கூறப்பட்ட போதிலும், 7.30 இற்கே வாக்கெடுப்பு நடத்தப்பட்டதன் காரணமாகவே எதிர்க்கட்சியின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த சந்தர்ப்பத்தில் சபையில் காணப்படவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

தேசிய கடன் மறுசீரமைப்பு குறித்த சட்டமூலம் பலவந்தமாகவே நிறைவேற்றிக் கொள்ளப்பட்டுள்ளது. காரணம் முழுமையான விவாதம் நிறைவடைந்த பின்னரே வாக்கெடுப்பு நடத்தப்படும் என சபாநாயகர் ஆரம்பத்தில் அறிவித்திருந்தார்.

ஆனால் திடீரென 7.30 மணியளவில் சகல விவாதங்களை நிறுத்தி வாக்கெடுப்புக்கு செல்வதாக அறிவித்தார். இதனால் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்த நேரத்தில் சபையில் இருக்கவில்லை.

தேசிய கடன் மறுசீரமைப்பால் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு 12 டிரில்லியன் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் மீது இவ்வாறு பாரிய சுமையை சுமத்தியிருப்பது பெரும் தவறாகும். சர்வதேசத்திடம் கடன் பெற்று தமது ஆட்சியை மேலும் சில ஆண்டுகளுக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கையையே அரசாங்கம் இதன் மூலம் எடுத்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் இது தொடர்பில் எந்தவொரு நிபந்தனையும் இல்லை.

இதன் மூலம் அரசாங்கம் பலவந்தமாகவே தேசிய கடன் மறுசீரமைப்பை மேற்கொண்டுள்ளது என்பது தெளிவாகிறது.

நாடாளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு பெரும்பான்மை காணப்படுவதால் எம்மால் அதனைத் தோற்கடிக்கமுடியாமல்போயுள்ளது.

9 மணிக்கு பின்னரே வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று கூறியதன் காரணமாகவே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் வாக்கெடுப்பின் போது சபையில் இருக்கவில்லை. மாறாக வேறு எந்த காரணமும் கிடையாது. தேர்தல் மூலமே அனைத்துக்கும் தீர்வு காண முடியும். தேர்தலொன்று நடத்தப்பட்டால் அதன் மூலம் மக்களின் விருப்பத்தை அறிய முடியும்.
- என்றார். (05)

# சர்வதேச யோகா தினத்தையொட்டி கிழக்கு பல்கலையில் 4 நாள் நிகழ்வு

கிழக்கு பல்கலைக் கழக திருகோணமலை வளாக சித்த மருத்துவ பீடமும், தொழிற்துறை மற்றும் சமூக இணைப்பு மையத்தின் அலகும் இணைந்து நடத்திய 9 ஆவது சர்வதேச யோகாதின நிகழ்ச்சித் திட்டங்களை கடந்த 4 நாள்களாக முன்னெடுத்திருந்தது.

இந்த நிகழ்ச்சிகளை சுவாமி விவேகானந்தா கலாசார மையம், கொழும்பு இந்திய உயர்ஸ்தானிகராலயம், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் போன்றவை இந்த 9 ஆவது சர்வதேச யோகாதின நிகழ்வுகளை சிறப்பிக்க பல வகையில் ஒத்துழைப்புக்களை வழங்கியது.

இதன் முதல்நாள் நிகழ்வாக, யோகா விழிப்புணர்வு பற்றிய நிகழ்ச்சித்திட்டத்தை திருகோணமலை பிரதேச சபை காரியாலயத்தில் நடத்தியது. இரண்டாம் நாள் யோகா பற்றிய விழிப்புணர்வுடன் ஆரம்பிக்கப்பட்ட நடைபவனியின்போது பொதுமக்களின் ஆரோக்கிய வாழ்வை யோகாவின் மூலம் மேம்படுத்தலாம் என்ற குறிக்கோளை முன்வைத்து இடம்பெற்றது.

மூன்றாவது நாள் நிகழ்வாக, திருகோணமலை வளாக ஒன்றுகூடல் மண்டபத்தில் சித்த மருத்துவபீட மாணவர்களால் நடத்தப்பட்ட யோகா ஆற்றுகை தொடர்பான பல நிகழ்ச்சிகளைச் செய்து காண்பித்தனர். இந்நிகழ்ச்சிக்குத் தலைமை விருந்தினராகக் கிழக்கு பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கமும், சிறப்பு விருந்தினராக இந்திய உயர் ஸ்தானிகராலய கலாசார பிரிவு இயக்குநர் பேராசிரியர் அங்குரன் டக்தாவும், கௌரவ விருந்தினராக திருகோணமலை வளாக முதல்வர் பேராசிரியை சந்திரவதனி தேவதாசன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நான்காம் நாள் இறுதி நிகழ்வாக, திருகோணமலை தடுப்பு சிறை உத்தியோகர்களுக்காக நடத்தப்பட்ட யோகா விழிப்புணர்வு நிகழ்ச்சியில், யோகாவின் மூலம் ஆரோக்கிய வாழ்வை மேம்படுத்துதல் என்ற விழிப்புணர்வுகளை வழங்கி வைத்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)



# தோட்ட நிறுவனங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## கூறுகிறார் ஜீவன் தொண்டமான்

பெருந்தோட்ட தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டும் வகையிலும், அவர்களுக்கான தொழில் உரிமைகளை வழங்குவதற்கு மறுக்கும் வகையிலும் செயற்படும் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான்.

ஹற்றன் பிராந்திய பெருந்தோட்ட கம்பனியினருடன் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

ஹற்றன் பிராந்திய பெருந்தோட்ட கம்பனியின் நிர்வாகத்துக்குட்பட்ட தோட்டங்களில் நீண்டகாலமாக நிலவும் தொழில் பிணக்குகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கான கூட்டமொன்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் கொழும்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகமான சௌமியபவனில் நடைபெற்றது.

இ.தொ.காவின் சார்பில் அதன் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன், தேசிய அமைப்பாளர் ஏ.பி.சக்திவேல், உபதலைவர் பாரத் அருள்சாமி, சிரேஷ்ட சட்ட ஆலோசகர் மாரிமுத்து, தொழிற்சங்க தேசிய அமைப்பாளர் லோகதாஸ், கட்சிபோகர் சிவராஜா, தோட்ட கமிட்டி தலைவர்களும், ஹற்றன் பெருந்தோட்ட வாரியத்தின் சார்பில் அதன் நிறைவேற்று முகாமையாளர் வருண மற்றும் தோட்ட முகாமையாளர் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, தொழில் பிணக்குகளுக்கு விரைவில் தீர்வுகளை வழங்குவது பற்றி ஆராயப்பட்டுள்ளது. பெருந்தோட்ட தொழிலாளர்களின் உழைப்பை மாத்திரம் சுரண்டிக்கொண்டிருக்கும் தோட்ட நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாகவும், தீர்வை வழங்காவிட்டால் ஹற்றன் பிராந்திய பெருந்தோட்ட கம்பனிக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் எச்சரித்துள்ளார்.

இந்நிலையில், தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என தோட்ட நிறுவன தரப்பில் அமைச்சருக்கு உறுதியளிக்கப்பட்டது. (05)



# மரக்கறிகளின் விலைகள் மலையகத்தில் உயர்வு

மலையகத்தில் தற்போது காணப்படுகின்ற மழையுடன் கூடிய காலநிலை காரணமாக மரக்கறி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், மலையக விவசாயிகளால் பயிரிடப்பட்டுள்ள மரக்கறிகளின் அறுவடை காலம் நெருங்கியுள்ள நிலையில், தொடர்ந்தும் அதிகரித்து வரும் மழையின் காரணமாக குறித்த மரக்கறிகள் அழுகி போவதற்கான ஆபத்து உள்ளதாக இந்தப் பகுதி விவசாய மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் குறித்த நிலை தொடர்ந்து நீடிப்பதன் காரணமாக தற்போது சந்தையில் மரக்கறிகளின் விலை குறிப்பிட்டளவு உயர்ந்துள்ளது. தொடர்ந்தும் மழையுடன் கூடிய காலநிலை அதிகரிக்குமாயின் மேலும் விலை அதிகரிக்கும் அபாயம் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் மரக்கறி வகைகளின் விலை வீழ்ச்சி காணப்பட்டிருக்கும். ஆனால். இந்த வருடத்தில் இவ்வாறு மரக்கறி வகைகள் விலை அதிகரிப்பால் மக்கள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர்.

மலையகத்தில் இவ்வாறான காலநிலையால் மரக்கறி வகைகளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

அந்தவகையில் -
லீக்ஸ் ஒரு கிலோ விலை - 200 ரூபா
பாவக்காய் ஒரு கிலோ விலை - 200 ரூபா
வெண்டிக்காய் ஒரு கிலோ விலை - 190 ரூபா
புடலங்காய் ஒரு கிலோ விலை -180 ரூபா
தக்காளி ஒரு கிலோ விலை - 360 ரூபா
கோவா ஒரு கிலோ விலை - 320 ரூபா
கறிமிளகாய் ஒரு கிலோ விலை - 480 ரூபா
கத்திரிக்காய் ஒரு கிலோ விலை - 250 ரூபா
நுவரெலியா உருளை கிழங்கு ஒரு கிலோ விலை - 290 ரூபா
போஞ்சி ஒரு கிலோ விலை - 600 ரூபா
பச்சைமிளகாய் ஒரு கிலோ விலை - 500 ரூபா
கரட் ஒரு கிலோ விலை - 440 ரூபாவிலிருந்து 480 ரூபா வரை விற்கப்படுவதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பதிலளிக்கப்படவேண்டிய கேள்விகள்

வவுனியா மாவட்டம், நைனாமடுவில் அமைக்கப்படவுள்ள சீனித் தொழிற்சாலை தொடர்பில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் சில பல கேள்விகளை முன்வைத்துள்ளார். ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்று அவரது கட்சி. அதே கூட்டணியில் மற்றொரு பங்காளி தமிழ் ஈழ விடுதலைக் இயக்கம். அந்த இயக்கத்தைச் சேர்ந்த தலைவர் மற்றும் பேச்சாளரே இந்தப் பொருத்தமற்ற திட்டத்தை வடக்குக்குக் கொண்டு வருவதில் தீவிரமாகப் பங்காற்றிவருகின்றார்கள். எனவே சுரேஸ் பிரேமச்சந்திரனின் கேள்விகளுக்கு அவர்கள்தான் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள்.

”ஏறத்தாள 400 முதல் 500 மில்லியன் டொலர் பெறுமதியான முதலீடாக சீனித் தொழிற்சாலை பேசப்படுகின்றது. அதில் தொழிற்சாலை உருவாக்குவதற்கு மட்டும் 100 மில்லியன் டொலர் செலவிடப்படும். அவ்வளவு பெரிய உற்பத்தி ஆலைக்கு மிகப் பெருமளவிலான கரும்பு நாளாந்தம் தேவை. அவ்வாறான பெருந்தொகைக் கரும்பை உற்பத்தி செய்யக்கூடிய வல்லமையில் வன்னி நிலம் இருக்கின்றதா? அதற்கான மனித வலு அங்கு இருக்கின்றதா?

இந்தத் தொழிற்சாலையை உருவாக்கப் போகிறவர்கள் தாய்லாந்தில் இருந்து வருகின்ற நிறுவனம் என்று சொல்லப்படுகின்றது. அவர்கள் நிச்சயமாக முதலீடு செய்யப்போகிறவர்கள் இல்லை. தொழிற்சாலையை உருவாக்குவதற்கான தொழிலட்நுப்பப் பங்காளிகளாகத்தான் இருப்பார்கள். அந்த நிறுவனம் பல நாடுகளில் சீனித் தொழிற்சாலையை உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. அப்படியானால் முதலீட்டைக் கொண்டு வருவது யார்? தாய்லாந்து நிறுவனம் நிச்சயம் முதலிடுவதற்குத் தயாராக இல்லை. ஆகவே வேறு யாராவதுதான் முதலீடு செய்யவேண்டும். எங்கிருந்து முதலீடு வரப்போகின்றது என்பது இது வரை எங்கள் யாருக்கும் தெரியாது. முதலீட்டைச் செய்யப் போகின்றவர்கள் யார்? எவ்வளவு முதலீடு செய்ய இருக்கின்றார்கள்? எவ்வளவு பெரிய ஆலை உருவாக இருக்கின்றது? அது வன்னி மண்ணுக்குப் பொருத்தமானதா? 30 ஆயிரம் 40 ஆயிரம் ஏக்கர் கரும்புச் செய்கைக்கு அந்த மண் ஏற்புடையதா? அதற்குத் தேவையான தொழிலாளர்கள் அங்கு இருக்கிறார்களா? தொழிலாளர்கள் போதாதெனில் எங்கிருந்து தொழிலாளர்கள் கொண்டுவரப்படுவார்கள்? அவர்கள் யார்? அவர்கள் எந்தப் பிரதேசத்தைச் சார்ந்தவர்கள்?”

ஆகிய கேள்விகளை முன்வைத்திருக்கிறார் சுரேஸ் பிரேமச்சந்திரன். அவரது கேள்விகள் நியாயமானவை. முதலீட்டாளர்கள் லண்டனைச் சேர்ந்தவர்கள் என்று தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் சார்பில் தெரிவிக்கப்படுகின்றது. இன்னும் சொல்லப் போனால் அவர்கள் சீனாவைச் சேர்ந்தவர்கள் இல்லை என்றும் விளக்கமளிக்கப்படுகின்றது. அப்படியென்றால் முதலீட்டாளர்கள் யார் என்பது பகிரங்கப் படுத்தப்படவேண்டும். இந்தத் திட்டத்தைக் கொண்டு வரப்போவதாகச் சொல்லப்படும் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் இணையத் தளம் தற்போது இயங்கவில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. அத்தோடு தாய்லாந்தைத் தளமாகக் கொண்டு இயங்கும் சீன ஆலைகளை அமைக்கும் நிறுவனத்திற்கும் இந்தத் திட்டத்தை இலங்கையில் செயற்படுத்தப்போகும் நிறுவனத்திற்கும் உள்ள தொடர்பு என்ன என்பதையும் விடுதலை இயக்கம் தெளிவுபடுத்தவேண்டும்.

இந்தத் திட்டத்திற்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் நடத்தப்படாமல் இந்தத் திட்ட முன்மொழிவை இதனை ஆதரிப்பவர்கள் வைத்திருக்கமாட்டார்கள் என்று நம்பலாம். அந்தச் சாத்தியக்கூறு ஆய்வு முடிவுகளையும் அவர்கள் பகிரங்கப்படுத்தவேண்டும். திட்டம் வருகிறதோ இல்லையோ அது பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு உண்டு என்பதை அனைவரும் மனதில் கொள்ளவேண்டும்.



# வவுனியா வடக்கில் 70 ஆயிரம் ஏக்கர் காடு அழிக்கப்படுமா?.

**ந.லோகதயாளன்**

வவுனியா வடக்கில் 400 மில்லியன் அமெரிக்க டொலரில் அமைக்க திட்டமிடப்படும் சீனி உற்பத்தி தொழிற்சாலையில் 1,050 பேருக்கு வேலைவாய்ப்புகிடைக்கும்என அமைச்சரவைப் பத்திரம் தெரிவிக்கின்றது.

வவுனியா மாவட்டத்திலே ஜனாதிபதியால் அனுமதிக்கப்பட்டுள்ள கரும்புச் செய்கைக்காக 70 ஆயிரம் ஏக்கர் காடுகள் அழிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகச் சுற்றுச்சூழலியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வடக்கு மாகாணத்தின் நுழைவாயிலான வவுனியா மாவட்டம் ஆயிரத்து 967 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட மாவட்டம். தற்போது சர்ச்சைக்குரிய கரும்பு உற்பத்தி மேற்கொள்ள எண்ணும் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவானது 686 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட ஓர் பிரதேச செயலாளர் பிரிவு. அதாவது, 168 ஆயிரத்து 756 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டது.

இந்தப் பிரதேச செயலாளர் பிரிவில் இருந்தே தற்போது சீனித் தொழிற்சாலைக்கும் கரும்பு உற்பத்திக்கும் நிலங்கள் வழங்கப்படவேண்டும். மொத்தம் 74 ஆயிரம் ஏக்கர் நிலம் இந்தப் பயன்பாட்டுக்காக ஒதுக்கப்படவேண்டும்.

வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில்

01. அபிவிருத்திப் பகுதியாக 91 கெக்டேயரும்,

02. குடியிருப்பு காணிகளாக 5,322 கெக்டேயரும்,

03. நெற் செய்கைக்கான வயல் காணிகளாக 4,318 கெக்டேயரும்

04. தோட்டச்செய்கை நிலங்களாக 369 கெக்டேயரும்

05. ஏனைய பயிர்கள் பயிரிடக்கூடிய நிலமாக 958 கெக்டேயரும் என மொத்தம்

11 ஆயிரத்து 58 கெக்டேயர் நிலம் மட்டுமே மனிதப் பாவனைக்குரியதாக இருக்கின்றது. அங்கே வாழும் 6,100 குடும்பங்களின் வாழ்வியல், வாழ்வாதாரம் ஆகியவற்றுடன் தொடர்புடையதாக இந்த நிலப்பரப்பே உள்ளது. 11,058 கெக்டேயர் எனில் 27 ஆயிரத்து 313 ஏக்கர் நிலமாகும்.

இதேநேரம் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலே வனவளத் திணைக்களத்தின் கீழ்

01. அடர்ந்தகாடுகள் என்ற வகையில் 47 ஆயிரத்து 320 கெக்டேயரும்,

02. திறந்த காடாக 4 ஆயிரத்து 4 கெக்டேயரும்

03. வனவள நடுகைப் பகுதியாக 143 கெக்டேயரும் உள்ளடங்களாக மொத்தமாக தற்போது 53 ஆயிரத்து 467 கெக்டேயர் நிலம் அல்லது 132 ஆயிரத்து 696 ஏக்கர் நிலம் உள்ளதாக மாவட்டச் செயலகப் புள்ளிவிவரங்கள் உறுதி செய்கின்றன.

இதேநேரம் எஞ்சிய நிலங்களாக

01. சிறு பற்றைகள் கொண்ட நிலமாக 2 ஆயிரத்து 169 கெக்டேயர் நிலமும்,

02. புல்வெளிகளாக 88 கெக்டேயரும்

03. நீர்ஏரிகள் குளங்களாக ஆயிரத்து 915 கெக்டேயரும் என 4 ஆயிரத்து 172 கெக்டேயர் அல்லது 10 ஆயிரத்து 305 ஏக்கர் நிலம் உள்ளதோடு ஏனைய வகையான பாவனையற்ற நிலங்களாக 204 கெக்டேயர் அல்லது 504 ஏக்கர் நிலம் உள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவு 168 ஆயிரத்து 756 ஏக்கர் பரப்பளவு கொண்டது என்றாலும் அதில் மனித நடவடிக்கைகளுக்கானது வெறுமனே 18 சதவீதமே. மிகுதி 74 சதவீதம் வனவளத் திணைக்களத்தின் வசமே இருக்கின்றது. எஞ்சியவை நீர் நிலைகளாக உள்ளன.

இந்தப் பூர்வீகப் பின்னணியில் கரும்புச் செய்கைக்காக 74 ஆயிரம் ஏக்கர் நிலத்தை வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து எப்படிப் பெறுவது?

அதற்கான எந்த வழிவகைகளும் குறிப்பிடப்படாமலேயே நைனாமடு சீனித் தொழிற்சாலை மற்றும் அதற்கான கரும்புச் செய்கை என்பவற்றுக்கு 74 ஆயிரம் ஏக்கர் நிலம் வழங்கப்படுவதற்கான அனுமதி ஜனாதிபதியால் அமைச்சரவையில் பெறப்பட்டுள்ளது. 2023-06-26 அன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த அனுமதி பெறப்பட்டது.


சீனித் தொழிற்சாலைக்கான அனுமதி பெறப்பட்ட அதே தினத்தில் நாட்டின் காடுகளை குறிப்பாகப் போரால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கில் உள்ள காடுகளை 1985ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த நிலைக்கு மீளக் கொண்டுவருவதற்கான அமைச்சரவைப் பத்திரம் ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதியும் பெறப்படடது. 1985ஆம் ஆண்டுக்கு முன்னர் மக்களின் குடியிருப்புகளாக இருந்து போரால் ஏற்பட்ட இடம்பெயர்வுகளால் காடு மண்டிப்போன இடங்களை விடுவிக்கும் வகையில் அதற்கான வரைபடங்களைத் தயாரிக்கவும் அமைச்சரவை அனுமதி பெறப்பட்டது. அப்படி விடுவிக்கப்படுவதற்காக வவுனியா மாவட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட நிலத்தின் அளவு, வெறுமனே 599 ஏக்கர் மட்டுமே.

இத்தகைய நிலையில் 74 ஆயிரம் ஏக்கர் நிலம் எங்கிருந்து கரும்புச் செய்கைக்காக ஒதுக்கப்படப்போகின்றது?

வவுனியா வடக்கின் பெரும் வனப்பகுதி அழிக்கப்பட்டே கரும்புச் செய்கைக்கு நிலம் விடுவிக்கப்பட வேண்டும் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலே வேறு எந்த நிலமும் கரும்புச் செய்கைக்கு இல்லாத நிலையில் காடுகளை அழிப்பதைத்தவிர நிலத்தைப் பெற வேறு வழியில்லை.

> வவுனியா மாவட்டத்திலே ஜனாதிபதியால் அனுமதிக்கப் பட்டுள்ள கரும்புச் செய்கைக்காக 70 ஆயிரம் ஏக்கர் காடுகள் அழிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ள தாகச் சுற்றுச் சூழலியலாளர்கள் சுட்டிக்காட்டு கின்றனர்.





கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road, Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





## FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| Ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| Ice Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| JUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர்
Kalaikkathir

# தேசிய மட்ட கிரிக்கெட் மற்றும் கராத்தே போட்டிகளில் தங்கப் பதக்கங்களை சுவீகரித்தது கிழக்கு மாகாணம்





47 ஆவது தேசிய விளையாட்டு விழாவின் கிரிக்கெட் போட்டிகள் எம்பிலிப்பிட்டிய மகாவலி விளையாட்டு தொகுதியிலும், கராத்தே போட்டிகள் சுகததாச உள்ளக அரங்கிலும் நடைபெற்று முடிந்தது.

இப்போட்டிகளில் கிரிக்கெட் விளையாட்டுக்காக ஆண்கள் அணி தங்கப்பதக்கமும், பெண்கள் அணி வெள்ளிப்பதக்கமும் சுவீகரித்ததுடன், கராத்தே போட்டிகளில் ஒரு தங்கப்பதக்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் உட்பட மொத்தமாக 5 பதக்கங்களை கிழக்கு மாகாண வீர வீராங்கனைகள் சுவீகரித்து சாதனை நிலைநாட்டிள்ளனர் எனக் கிழக்கு மாகாண விளையாட்டு பணிப்பாளர் என்.எம். நௌபீஸ் தெரிவித்தார். (05)




## ஓரினச் சேர்க்கையாளர்கள் விடயத்தில் மக்கள் முன்னணியிடம் ஓர் கோரிக்கை

### அரச பொது ஊழியர் சங்கம் விடுத்தது

தன்னினச்சேர்க்கையாளர்களின் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபாடு காட்டுவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்றகட்சி வெளிநாட்டு நிதிகளைப் பெற்று இவ்வாறான விடயங்களை ஊக்கவிப்பதாகவே நாங்கள் அறிகின்றோம். இவ்வாறான கட்சிகளை மக்கள் எதிர்வரும் காலங்களில் நிராகரிப்பார்கள் என நாம் நம்புகின்றோம். இந்தக் கட்சிக்கு மக்கள் கொடுத்த சிறு ஆணை மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்தவதற்குத் தான். ஆனால் இவ்வாறான விடயங்களில் மேற்படி கட்சி ஈடுபடாது மக்கள் நலனில் அக்கறை காட்ட முன்வர வேண்டும் என அகில இலங்கை அரச பொது ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் வருத்தம் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் கல்முனையில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

சிறிய நாடான இலங்கையில் பல கலாசாரங்கள் உள்ளன. இங்கு இந்து, பௌத்தம், இஸ்லாம் ஆகியவை சமயங்களாகும். இந்தச்சமயங்கள் ஏற்றுக்கொள்ளாத தன்னினச் சேர்க்கையாளர்களின் நடவடிக்கைகளை இலங்கை சட்டத்தில் தற்போது உட்புகுத்த அவசியமில்லை. இவ்வாறான விடயங்களை வெளிநாடுகளில் இயங்கும் சில தரப்பினர் இலங்கைக்குள் திணிக்கப்பார்க்கின்றனர். இந்த அரசாங்கமும் அந்த பணத்தில் ஆடிக்கொண்டு இருக்கின்றனர்.

இந்நடவடிக்கைகளை வெளிநாட்டினரின் திருப்திக்காகஇலங்கைக்குள்திணிக்கப் பார்க்கின்றனர். இவ்வாறான விடயங்களை நாங்கள் எதிர்க்கின்றோம். மக்களுக்குத் தேவையான விடயங்களை நாங்கள் செய்ய வேண்டும். மக்கள் இன்று பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால்பொருளாதாரரீதியில் பாதிக்கப்பட்டு உணவின்றி எத்தனையோ பேர் தற்கொலை செய்துள்ளார்கள் என ஊடகங்கள் வாயிலாக அறிந்துள்ளோம். அவ்வாறான சூழ்நிலை இலங்கையில் உருவாகி வருகின்றது. அரசாங்கம் பைத்தியக்காரத்தனமாக வேலைகளில் ஈடுபடாமல் மக்கள் நலனில் ஈடுபடுமாறும் இவ்வாறான தன்னினச் சேர்க்கையாளர்களின் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபாடுகாட்டுவதைவன்மையாகக் கண் டிக்கின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் கூட இவ்வாறான தன்னினச் சேர்க்கையாளருக்கு ஆதரவு வழங்கப்பட்டிருக்கவில்லை.

ஆனால் தங்களுடைய அரசியல் இலாபங்களுக்காகவும் தங்களது கட்சியை வளர்ப்பதற்காகவும் இவ்வாறானசெயற்பாடுகளை சமூகத்தின் மத்தியில் திணிக்கின்றனர். இந்தச் செயற்பாட்டை மக்கள் மத்தியில் திணிக்க முற்படுகின்றவர்களுக்கு வடக்கு கிழக்கு மக்கள் தகுந்த பாடத்தை புகட்ட வேண்டும். தொழிற்சங்கம் என்ற ரீதியில் நாங்கள் இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றோம்.

ஏனெனில் கடந்த 33 வருடங்களாக வடக்கு கிழக்கு மக்களுக்காக நாங்கள் குரல் கொடுத்து வருகின்றோம். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற கட்சி வெளிநாட்டு நிதிகளைப் பெற்று இவ்வாறான விடயங்களை ஊக்குவிப்பதாகவே நாங்கள் அறிகின்றோம். இவ்வாறான கட்சிகளை மக்கள் எதிர்வரும் காலங்களில் நிராகரிப்பார்கள் என நாம் நம்புகின்றோம். இந்தக் கட்சிக்கு மக்கள் கொடுத்த சிறு ஆணை மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்தவதற்குத் தான். ஆனால் இவ்வாறான விடயங்களில் குறித்த கட்சி ஈடுபடாது மக்கள் நலனில் அக்கறை காட்ட முன்வர வேண்டும் என கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம் எனக்குறிப்பிட்டார்.

அண்மையில்தன்னினச் சேர்க்கையாளர்கள்தங்களது உரிமைகளை வலியுறுத்தி கொழும்பு மற்றும் யாழ். மாவட்டங்களில்ஊர்வலங்கை நடத்தி இருந்த நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிகட்சியின்ஆதரவுஅவர்களுக்குதெரிவித்துவருவதாக சமூகஊடகங்களில்தகவல்கள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

### முள்ளிவாய்க்காலில் பாதிக்கப்பட்டவரான

# தாயிடமிருந்து மகனை பிரிக்காதீர் ஆஸி. அதிகாரிகளிடம் கோரிக்கை

இலங்கையை சேர்ந்த டிக்ஸ்டன் அருள்ரூபனை அவரது தாயாரிடமிருந்து பிரிக்கவேண்டாம் என ஆஸ்திரேலியாவின் உள்துறை அமைச்சருக்கு ஆஸ்திரேலியாவின் தமிழ் ஏதிலிகள் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

டிக்ஸ்டனின் 13 வயதில் அவரது தந்தை முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையில் கொல்லப்பட்டார்.

டிக்ஸ்டனும் அவரது தாயார் பேத்தியார் ஆகியோர் இலங்கையின் மிகவும் மோசமான இடைத்தங்கல் முகாம்களில்தடுத்துவைக்கப்பட்டனர்.

முகாமிலிருந்து வீடு திரும்பிய பின்னர் தாயார் ரீட்டா வீட்டிற்கு சென்ற இராணுவத்தினரால் பாலியல் வன்முறைக்குள்ளானார்.

இதன்பின்னர்தனதுபாதுகாப்பை உறுதி செய்ய விரும்பிய அவர் மகனைதனதுதாயாரின்பாதுகாப்பில் விட்டுவிட்டு 2012 இல் ஆஸ்திரேலியா தப்பிச்சென்றார்.

அவருக்கு நிரந்தர பாதுகாப்பும் வழங்கப்பட்டது, இதன் காரணமாக தனது மகன் தன்னுடன் இணையும் நாள் வரும் என்ற அவரது நம்பிக்கையும் அதிகரித்தது.

2016 இல் டிக்ஸ்டனின் பேத்தியார் காலமானார் இதன் காரணமாக அவன் தனக்கு இருந்த ஒரேயொரு நெருங்கிய குடும்ப உறவையும் இழந்தான். ரீட்டா மகனை சட்டபூர்வமாக ஆஸ்திரேலியாவிற்கு அழைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார் அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. எனினும் தனது தாயாருடன் சேர்வதற்காக டிக்ஸ்டன் 2019 இல் விமானம் மூலம் ஆஸ்திரேலியா சென்றார்.





அவனை ஆஸ்திரேலிய அதிகாரிகள் குடிவரவு தடுப்பு முகாமில் தடுத்துவைத்தனர். தொடர்ந்தும் அவர் அங்கேயே உள்ளார்.

கடந்தவாரம் அவர் இலங்கைக்கு விரைவில் நாடு கடத்தப்படுவார் என அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

மிகவும் துன்பகரமான கடந்த காலத்திலிருந்து மீண்டு தாயுடன் இணைவதற்கும் அமைதியான வாழ்வை வாழ்வதற்கும் தாயும் மகனும்பெருவிருப்பம்கொண்டுள்ளனர். ஆனால் தற்போதைய நிலை பெரும் துயரத்தையே ஏற்படுத்துகின்றது.

ரீட்டாவின் ஒரேயொரு மகனை - அவரதுகுடும்பத்தில்எஞ்சியிருப்பவரை ஆஸ்திரேலிய அரசாங்கம் எந்த வித குற்றச்சாட்டையும் சுமத்தாமல் தடுத்துவைத்துள்ளது. ரீட்டாவின் கணவரின் கொலையாளியின் கரங்களிற்கு மகனை நாடு கடத்த ஆஸ்திரேலியா திட்டமிட்டுள்ளது.

டிக்ஸ்டனை முதலில் ஆஸ்திரேலிய அரசாங்கம் குடிவரவு தடுப்பு முகாமிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள தமிழ் ஏதிலிகள் பேரவை இதன் மூலம் அவர் தனது தாயாருடன் இணைவதற்கானவாய்ப்புகிடைக்கும் எனத் தெரிவித்துள்ளது.

தாயாரும் மகனும் போதியவு துன்பங்களை அனுபவித்துள்ளனர் அவர்கள் தங்கள் வாழ்க்கையை மீள உருவாக்க அனுமதிக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ள ஏதிலிகள் பேரவை, டிக்ஸ்டனை நாடு கடத்தும் திட்டத்தை அவுஸ்திரேலிய அரசாங்கம் கைவிடவேண்டும், அவரை முகாமிலிருந்து விடுதலை செய்து நிரந்தர பாதுகாப்பு விசாவை வழங்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது. (05)

## காரைதீவில் புலமைப் பரிசில் வழங்கல் நிகழ்வு

காரைதீவு பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 22/24 ஆம்கல்விஆண்டில்உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் 89 மாணவர்களுக்கு சிப்தொற புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் காரைதீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் வே. ஜெகதீசனும் மற்றும் காரைதீவு பிரதேச சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் மற்றும் முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (05)

## மனிதப் புதைகுழிகளை மூடி மறைப்பதற்குத்தான் தொல்லியல் திணைக்களத்தால் காணி பிடிப்பா?

### மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கேள்வி

கொக்குதொடுவாய் போன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள எண்ணிலடங்காத மனிதப்புதைகுழிகளை மூடிமறைப்பதற்காகத்தான் அங்குள்ள பெருமளவான நிலங்களை தொல்லியல் திணைக்களம்தம்வசப்படுத்தியிருக்கின்றதா? என்று மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் பகுதியில் தண்ணீர்க் குழாய்களைப்பொருத்துவதற்காகக் ஜூன் 29 நிலத்தைத் தோண்டியபோது மனித எச்சங்கள் மற்றும் ஆடைகள் தென்பட்டதை அடுத்து, அந்தப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

அதனைத்தொடர்ந்து ஜூன் 30 அந்த இடத்தைப் பார்வையிட்ட முல்லைத்தீவு நீதிவான், அங்கு ஜூலை 6 அகழ்வுப் பணிகளை ஆரம்பிக்குமாறும், அதுவரையில் அப்பகுதியிலுள்ள மனித எச்சங்கள் சிதைவுறாதவண்ணம் பாதுகாக்குமாறும் பொலி–ஸாருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

அண்மையில் (ஜூன் மாதம் 23 ஆம் திகதி) 4 சர்வதேச அமைப்புக்கள் ஒன்றிணைந்து 'இலங்கையிலுள்ள பெரும் மனிதப்புதைகுழிகளும், வெற்றியடையாத அகழ்வுப் பணிகளும்' என்ற தலைப்பில் நாடளாவிய ரீதியில் கண்டறியப்பட்ட மனிதப்புதைகுழிகள் மற்றும் அவற்றின் அதிர்ச்சியளிக்கும் பின்னணி குறித்த அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தன.

அந்த அறிக்கை மிகமுக்கிய பேசுபொருளாக மாறியிருந்த பின்னணியில், இறுதிப் போர் இடம்பெற்ற மாவட்டமான முல்லைத்தீவின் கொக்குத்தொடுவாயில் மனித எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளமை, அதுவும் ஒரு மனிதப்புதைகுழியாக இருக்கக் கூடுமோ என்ற சந்தேகத்தை மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், கொக்குதொடுவாய் பகுதியில் முறையான கண்காணிப்புடன்கூடிய அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படுவதுடன் பக்கச்சார்பற்றதும் வெளிப்படைத்தன்மைவாய்ந்ததுமானவிசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டியது அவசியம் என்று வலியுறுத்தினர்.

அது மாத்திரமன்றி மனிதப்புதைகுழிகள் தொடர்பில் இலங்கை மிகநீண்ட வரலாற்றைக் கொண்டிருப்பதாகவும், மன்னார் மனிதப்புதைகுழி உள்ளடங்கலாகக் கடந்த காலத்தில் கண்டறியப்பட்ட மனிதப்புதைகுழிகளின் பின்னணி குறித்து முன்னேற்றகரமான விசாரணைகள் இடம்பெறவில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அதேவேளை இவ்வாறான எண்ணிலடங்காத மனிதப்புதைகுழிகளை மூடி மறைப்பதற்காகத்தான் தொல்லியல் திணைக்களம்வடக்கு,கிழக்குமாகாணங்களில் பெருமளவான நிலங்களைத் தம்வசப்படுத்தியிருக்கின்றதா? என்று கேள்வி எழுப்பியுள்ள மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், இந்த விடயம் தொடர்பில் உரியவாறான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தியுள்ளனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# சகோதர இனத்தவருடன் ஒற்றுமையாக வாழ அனைத்து மாணவரையும் பழக்க வேண்டும்

## முப்தி யூசுப் ஹனிபா வலியுறுத்து





இலங்கையின் மூத்த உலமாக்களில் ஒருவரான முப்தி யூசுப் ஹனிபா அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாசலுக்கு வருகை தந்து பள்ளிவாசல் வளாகத்தை சுற்றிப் பார்வையிட்டார். இதன்போது பள்ளிவாசலின் சுற்றுச்சூழல் மிக அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும், பள்ளிவாசலில் இடம் பெறும் அண்மைக்கால நிகழ்வுகளை பள்ளிவாசல் நிர்வாகிகளிடம் கேட்டறிந்தவர், அந்தச்செயற்பாடுகளைப் பாராட்டிய வேளை பள்ளிவாசல் வளாகத்துடன் இளையவர்களின் தொடர்புகளை அதிகரிக்குமாறு கேட்டுக் கொண்டதுடன் அதற்காக பள்ளிவாசல் வளாகத்தில் விளையாடக்கூடிய விளையாட்டு ஒழுங்குகள் பற்றியும், இளையவர்களுக்கான பொழுதுபோக்கு சூழல் உருவாக்கப்பபட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாசல் தலைவர் எஸ்.எம். சபீஸ் தலைமையிலான நிர்வாகிகளுடன் கலந்துரையாடிய முப்தி யூசுப் ஹனிபா, அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் கடந்த வருட சாதாரண தரத்தில் கணித, விஞ்ஞான பாடங்களில் பெற்ற பெறுபேறுகளுடன் ஒப்பிடுகையில் இஸ்லாம் பாடத்தின் அடைவு மட்டம் மிகவும் வீழ்ச்சி அடைந்திருப்பதாக புள்ளி விவரங்களை மேற்கோள் காட்டி கவலையை வெளியிட்டதுடன் எமது பிள்ளைகளின் இஸ்லாம் பாடத்தின் மீதான வீழ்ச்சி பெற்றோராகிய எம்மை முதியோர் இல்லம்வரை அழைத்துச் செல்லும் அபாயம் உள்ளதை மனதில் வைத்து உடனடியாக சாதாரண தர மாணவர்களுக்கான நிகழ்ச்சிகளை வடிவமைத்து இந்தக் குறையை நிவர்த்தி செய்ய பள்ளிவயல் நிர்வாகம் செயற்பட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

அத்துடன் ஏனைய சமூகங்களின் உணர்வுகளை மதிக்கக் கூடியவர்களாக எமது சக இனங்களோடு சகவாழ்வைப் பேணி நடக்க வேண்டிய வழிமுறைகள் பற்றி கருத்து வெளியிட்ட அவர், இனங்களுக்கிடையில் பிரச்சினைகள் ஏற்படும் போது மட்டும் தீர்வுகளை தேடிச் செல்கின்றவர்களாக நாம் இல்லாமல் எப்போதும் சக இனங்களின் சிவில் சமூகத் தலைவர்கள் மற்றும் மதப் பெரியார்கள் போன்றவர்களுடன் நல்லுறவைக் கட்டி எழுப்பி ஏனைய சமூகங்களுடன் கலந்து வாழப் பழகிக் கொள்ள வேண்டுமே தவிர கரைந்து போய் விடக்கூடாது என்பதையும் வலியுறுத்திப் பேசினார். (05)





# மதில் வீழ்ந்து குழந்தை சாவு

இரண்டரை அடி உயரமான மதில் வீழ்ந்ததில் ஒரு வருடமும் 9 மாதங்களும் நிரம்பிய ஆண் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

பூநகரியைச் சேர்ந்த இமானுவேல்தர்சன் சாதுசன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

முல்லைத்தீவு, சிலாவத்தையிலுள்ள உறவினர்களின் வீட்டுக்கு குடும்பத்தினர் ஞாயிற்றுக்கிழமை சென்றுள்ளனர். தூண் போடப்படாத பழைய மதில் அருகில் குழந்தை தந்தையுடன் விளையாடிக் கொண்டிருந்துள்ளது. அதன் மறுபக்கத்தில் நின்றிருந்த உறவினர் ஒருவர் குழந்தையை மதில் மேலாகத் தூக்குவதற்காக, மதிலில் ஒரு காலை ஊன்றியுள்ளார். அப்போது மதில் சரிந்து குழந்தை மீது வீழ்ந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட குழந்தை மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் திங்கட்கிழமை உயிரிழந்தது. (02)

# வாக்களித்த தொழிலாளர்களைவிடவும் பதவி தந்த ஆட்சிதான் சிலருக்கு முக்கியம்

## வேலுகுமார் எம்.பி. குற்றச்சாட்டு

வாக்களித்த தொழிலாளர்களா?, பதவி கொடுத்த ஆட்சியா என்றால், ஆட்சிதான் எனக் கண்ணை மூடிக்கொண்டு வாக்களிக்கும் மலையகப் பிரதிநிதிகளே இன்றைய ஆட்சியில் பதவியில் உள்ளனர்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.வேலுகுமார் தெரிவித்தார்.

கண்டியில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு பிரேரணை நிறைவேற்றப்பட்டது. அதன் மூலம் உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பதற்கான முழு அதிகாரமும் நிதி அமைச்சருக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்டது. உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் முழுச்சுமையும் தொழிலாளர் மீது சுமத்தப்படப் போகின்றது என்பது வெளிப்படையாகவே முன்வைக்கப்பட்டது.

எனினும், வாக்களித்த தொழிலாளர்களா?, பதவிகொடுத்த ஆட்சியா? என்றால் ஆட்சிதான் எனக் கண்ணை மூடிக்கொண்டு வாக்களிக்கும் மலையகப் பிரதிநிதிகளே இன்று உள்ள அரசில் உள்ளனர்.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பில் தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் பயன்படுத்தப்படவுள்ளது.

இந்த நிதியங்களில் நாட்டில் உள்ள 25 இலட்சம் வரையிலான தொழிலாளர்களின் சேமிப்பே உள்ளது. ஒருவர் உழைக்கும் போது, தனது ஓய்வுக் காலத்துக்காக தன்னுடைய உழைப்பில் இருந்து சேமிக்கும் நிதியே இதுவாகும். அதனை வெட்டிக் குறைப்பது என்பதோ, அல்லது அதற்கான வருவாய்களைக் குறைப்பது என்பதோ தொழிலாளர்களின் உழைப்பைச் சூறையாடுவதாகும். அதனையே அரசு செய்யப்போகின்றது.

இந்த 25 இலட்சம் தொழிலாளர்களின் நிலை, மரத்தில் இருந்து விழுந்தவனை மாடு முட்டும் நிலையாகவே உள்ளது. அதிலும், பெருந்தோட்டத்தொழிலாளர்களின் நிலைமை, மரத்தில் இருந்து விழுந்தவனை யானை மிதிக்கும் நிலை யாக மிகவும் பரிதாபகரமாக இருக் கின்றது. பெருத்தோட்டத் தொழிலாளர்களுக்கு உழைப்புக்கேற்ற கூலி வழங்கப்படுவதில்லை என்பது நாடே அறிந்த விடயம். அதிலும், அக்கூலியில் இருந்து குறைத்து சேமிக்கப்படும் சேமலாப நிதியத்தையும் அரசு தனது தேவைக்காக எடுத்துக்கொள்வது மிகப்பெரிய அநியாயம் ஆகும்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து மாதா மாதம் சந்தாவைப் பெற்றுக் கொள்கின்றனர். அதில் இலட்சக்கணக்கான வருமானம் பெறுகின்றனர். மறுபக்கம் அவர்களின் வாக்குகளைப் பெற்று பதவிகளையும் பெற்றுக்கொள்கின்றனர். ஆனால், தொழிலாளரின் உரிமை பறிக்கப்படும்போது, அவர்களுக்கு அநியாயம் நடக்கும்போது அதையெல்லாம் செய்பவர்களோடு சேர்ந்து, பதவிக்கும், வசதிக்கும், சலுகைக்குமாக அரசுக்கு முழு ஒத்துழைப்பை வழங்குவதையே அரசில் உள்ள மலையகப் பிரதிநிதிகள் வேலையாகச் செய்து வருகின்றனர். இப்போதாவது மக்கள், முதலாளிகளோடு யார் உள்ளார்கள், தொழிலாளர்களோடு யார் உள்ளார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இல்லையென்றால் மிச்சம் மீதியுள்ள கொஞ்சமும் கைவிட்டுப் போய்விடும். - என்றார். (02)

# கரந்தெனிய கோர விபத்தில் தாயும் மகளும் உயிரிழப்பு

## தந்தை படுகாயம்

கார் ஒன்றும் கனரக வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் தாயும் மகளும் உயிரிழந்துள்ளனர். தந்தை படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தக் கோர விபத்து காலி, கரந்தெனிய பிரதேசத்தில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்றது.

விடுமுறை நாட்களில் மலையகத்துக்குச் சுற்றுலா சென்றுவிட்டு கரந்தெனிய பிரதேசத்திலுள்ள வீட்டுக்குக் காரில் வந்துகொண்டிருந்த குடும்பமே வீட்டுக்கு 500 மீற்றர் தொலைவில் விபத்தில் சிக்கியுள்ளது.

பொருட்களை ஏற்றிக் கொண்டு வந்த கனரக வாகனம் காருடன் மோதியதில் அதில் இருந்த 38 வயதுடைய தாயும், 13 வயதுடைய மகளும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

காரைச் செலுத்தி வந்த 42 வயதுடைய தந்தை படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கனரக வாகனத்தின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

# மனித உரிமைகள் குறுங்கால கற்கை நெறி தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஆரம்பம்





மிக விரைவில் மூன்றாம் தொகுதி மாணவர்களுக்கான மனித உரிமைகள் குறுங்கால பாடநெறிக்கான சான்றிதழ் மற்றும் டிப்ளோமா கற்கை நெறிகள் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன என கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் தெரிவித்தார்.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக மனித உரிமைகள் கற்கைநெறி மாணவர்களின் பிரியாவிடை நிகழ்வு தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் அரசியல் விஞ்ஞானத் துறையால் நடத்தப்பட்ட மனித உரிமைகள் குறுங்கால சான்றிதழ் பாடநெறிக்கான இரண்டாம் தொகுதி மாணவர்களின் இறுதிப் பரீட்சையும் பிரியாவிடை நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மனித உரிமைகள் கற்கை நெறியின் மாணவன் முஸ்தபா முபாறக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக வும், விசேட அதிதிகளாக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில் , பாடநெறியின் இணைப்பாளர் விரிவுரையாளர் ரி.எப். சஜீதா, உதவி விரிவுரையாளர்கள், மாணவ, மாணவிகள் எனப் பலரும் கலந்து கொண்டதுடன் நிகழ்வில் கலந்து கொண்ட பல்கலைக்கழக உபவேந்தர், பீடாதிபதி, விரிவுரையாளர் மற்றும் மாணவ, மாணவிகளுக்கு நினைவு சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDUM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/-
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2
3



# குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனாருக்கு பொங்கல்விழா அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ரவிகரன் அழைப்பு




முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலை, ஆதிசிவன் ஐயனாருக்கு இம்மாதம்14ஆம்திகதிபொங்கல்வழிபாடுகள் மேற்கொள்ளவுள்ளதாக முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இந்த பொங்கல் வழிபாடுகளில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் ரவிகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

எங்களுடைய குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் தொடர்பில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தாலும், ஏற்கனவே நீதிமன்றக் கட்டளையின்படி சைவ-வழிபாடுகள் மேற்கொள்ளலாம் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய நாங்கள் எல்லோரும் இம்மாதம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, காலை 09மணிக்கு குருந்தூர்மலை ஆதி சிவன் ஐயனார் இருந்த இடத்தில் ஒரு பொங்கல் வழிபாட்டை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளோம். அனைவரையும் அந்த பொங்கல் வழிபாட்டில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (05)

# ஆந்திரா மாநில முதல்வரை சந்தித்தார் கிழக்கு ஆளுநர்



(அபு அலா)

ஆந்திர மாநில முதலமைச்சர் ஜகன்மோகன் ரெட்டியை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சந்தித்து இருநாடுகளுக்கும் இடையிலான நட்புறவை வலுப்படுத்துவது தொடர்பாகவும், கரும்பு மற்றும் மிளகாய் விவசாய, மருந்துகள் உற்பத்தி நிறுவனம் அமைப்பது குறித்தும் கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

பி.கியு.ஐ ஆடைகள் பூங்கா குறித்தும், திருகோணமலை துறைமுகத்திலுள்ள தொழிற்பூங்காவில் முதலீட்டாளர்களைத் தொழில் பூங்கா அமைக்க ஊக்குவிப்பது குறித்தும் ஆந்திர மாநில அரசிடம் செந்தில் தொண்டமான் கோரிக்கை விடுத்தார்.

இலங்கையில் திருப்பதி திருமலை கோவில் பக்தர்கள் அதிகளவிலுள்ள நிலையில் வயது மூப்பு காரணமாகத் திருப்பதிக்கு பயணம் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். அவர்களின் வசதிக்காக இலங்கையில் திருப்பதி திருமலை கோவில் அமைக்க கோரிக்கையொன்றையும் விடுத்தார்.

இந்தக் கோரிக்கைக்கு சாதகமான பதிலை ஆந்திர மாநில முதலமைச்சர் ஜகன்மோகன் ரெட்டி வழங்கியதுடன், ஆந்திர முதலமைச்சரால் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு திருப்பதி பெருமாள் சுவாமி சிலையை வழங்கி கௌரவித்தார். (05)

# இளைஞர்களைத் தொழில் முனைவோராக மாற்றத் தொழில்வாண்மைக் கருத்தமர்வு

தொழிவாய்ப்பற்று புதிய தொழிவாய்ப்பை நாடியுள்ள இளைஞர்களைத் தொழில் முனைவர்களாக மாற்றுவதற்கான தொழில் வாண்மை கருத்தரங்கொன்று சாய்ந்தமருது பிரதேச செயலக மண்டபத்தில் சாய்ந்த மருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் கிழக்கு நட்புறவு ஒன்றிய ஏற்பாட்டில் சொப்ற் கியார் அனுசரணையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த கருத்தரங்கில் பிரபல தொழில் முனைவரும், கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் தலைவருமான பொறியலாளர் எம்.எம். நசீர் பிரதான வளவாளராக கலந்துகொண்டு தொழில் முயற்சி, தொழில் மேம்பாடு, தொழில் வளர்ச்சி உட்பட பல்வேறு விடயங்களை தன்னுடைய அனுபவத்துடன் கூடியதாக இளைஞர்களுக்கு விளக்கினார். தொடர்ந்தும் கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் நிதிப் பணிப்பாளரும், சட்டமொழுங்கு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் ஏ.எல்.எம். சலீம் கலந்துகொண்டு இளைஞர்களுக்கு கல்வியுடன் கூடிய தொழில் பயிற்சிகள் தொடர்பில் விளக்கமளித்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் நிர்வாக பணிப்பாளர் தபாலதிபர் யூ.எல்.எம். பைசர் உட்பட பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், சாய்ந்தமருது பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி எம்.எம். சமிழுள் இலாஹி, பிரதேச செயலக அதிகாரிகள், சாய்ந்தமருது பிரதேச இளைஞர், யுவதிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (05)

# பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு சாய்ந்தமருதில் விளையாட்டு விழா – 2023







சர்வதேச புகைத்தல் மற்றும் மது எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி பிரிவின் ஏற்பாட்டில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கிடையே விளையாட்டு போட்டிகள் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில் கல்முனை ஸாஹிரா கல்லூரி மைதானத்தில் மிக கோலாகலமாக நடைபெற்றது.

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் 03 அணிகளாக பிரிக்கப்பட்டு மைதான நிகழ்வுகளும், கிரிக்கெட் சுற்றுப் போட்டியும் இடம் பெற்றது. இதில் கிங்ஸ் லெவன் அணி - 58 புள்ளிகளையும், டைடன் அணி 48 புள்ளிகளையும், றோயல் சலன்ஸ் அணி 47 புள்ளிகளையும் பெற்று முதலாம் இடத்தை கிங்ஸ் லெவன் அணி பெற்று வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்த விளையாட்டு விழாவில் உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.றம்ஸான், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.நளீர், சமுர்த்தி தலைமை பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சி.எம். நஜீம், சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ மஜீத், பிரதேச செயலக பிரதம முகாமைத் துவ உதவியாளர் எம்.எம். சமூன், நிதி உதவியாளர் ஏ.சி. முஹம்மட், திட்டமிடல் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.றியாஸ் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (05)

# பெண் தலைமைத்துவத்தை வலுவூட்டுவதின் ஊடாக உள்ளூராட்சி மன்ற சேவைகளை நவீன மயமாக்கல்





கனேடிய உதவியின் கீழ் இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தால் அமுல்படுத்தப்படுகின்ற 'உள்ளூர் பெண் தலைமைத்துவத்தை வலுவூட்டுவதின் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை நவீனமயமாக்கும் செயற்றிட்டம்' சேவைபகுப்பாய்வு கருவி தயார்ப்படுத்துவதற்கு பொருத்தமான பயிற்சிநெறி கோறளைப்பற்று பிரதேச சபை மண்டபத்தில் கோறளைப்பற்று பிரதேசசபை செயலாளர் எஸ். நவநீதன் தலைமையில் நடைபெற்றது.

இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளனமும் மற்றும் கனேடிய உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளனமும் கோறளைப்பற்று பிரதேச சபையுடன் இணைந்து ஆரம்பிக்கப்படவுள்ள ஆறு வருட செயற்திட்டம் தொடர்பில் சேவை பகுப்பாய்வு கருவி உருவாக்கப்படல் தொடர்பில் இங்கு ஆராயப்பட்டது.

குடிமக்களின் கருத்துக்களின் அடிப்படையில் வழங்கப்படும் பொது சேவைகளை பகுப்பாய்வு செய்ய இந்த சேவை பகுப்பாய்வு கருவி பயன்படுத்தப்படும் என்றும் பாலின சமத்துவத்தைப் பாதுகாப்பதும், அதிகார வரம்பின் அனைத்து குடிமக்களுக்கும் சமமான முறையில் சேவைகள் கிடைப்பதை உறுதி செய்வதும் இதன் முக்கிய நோக்கமாக அமைய உள்ளதாக இங்கு கலந்துரையாடப்பட்டது.

கனேடிய தேசிய வளவாளர்கள் இந்த சேவை பகுப்பாய்வு கருவி குறித்து எதிர்காலத்தில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை ஏற்பாடு செய்ய உள்ளதுடன் மேலும் அதை கோறளைப்பற்று பிரதேசசபைக்கு ஏற்ப மாற்றியமைப்பதற்கு தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்குவது தொடர்புலும் இங்கு ஆராயப்பட்டது.

இந்த பயிற்சி கலந்துரையாடலில் இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளன பிரதம நிறைவேற்று அதிகாரி ஹேமந்தி குணசேகர பிரதம வளவாளராகக் கலந்து கொண்டதுடன் இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளன சிரேஷ்ட நிகழ்ச்சி திட்ட முகாமையாளர் பீ. பிரதீப் பயிற்சிநெறிக்கு நெறிப்படுத்தித்துனநராகக் கலந்து கொண்டதுடன் உள்ளூராட்சி மன்றங்களின் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் எம்.ஐ.எம். வலீத், கோறளைப்பற்று பிரதேச சபை உத்தியோகத்தர்கள், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பொதுச்சுகாதார பரிசோதகர்கள், பிரதேச செயலக உத்தியோகாத்தர்கள், சமூக பொதுநிறுவன நிர்வாகிகள் உட்பட்ட பலரும் கலந்து கொண்டனர். (05)

# மருதமுனை மஸ்ஜிதுல் நூர் பள்ளிவாசலில் 35 லட்சம் ரூபா செலவில் புதிய மிம்பர்







அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை பிரதேசத்தில் உள்ள பூர்வீக வரலாற்றை கொண்ட பள்ளிவாசல்களில் ஒன்றான மஸ்ஜிதுல் நூர் ஜும்மா பள்ளிவாசலில் புதிய மிம்பர் அமைக்கும் வேலை திட்டம் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை தலைவரும் கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தருமான எம்.ஐ.எம். முஹர்ரப் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மஸ்ஜிதுல் நூர் பள்ளிவாசலின் கட்டட நிர்மாண பணிகளை பூரணப்படுத்தும் வேலை திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு கட்டமாகவே இந்த நவீன முறையிலான மர வேலைப்பாடுகள் நிறைந்த மிம்பர் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி உட்பட பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், கட்டட குழு தலைவர், செயலாளர் உட்பட அதன் உறுப்பினர்கள், வர்த்தக பிரமுகர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள் என பலர் கலந்து கொண்டனர். இங்கு உரையாற்றிய பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் சபை தலைவர் பள்ளிவாசலின் புதிய மிம்பர் அமைப்பதற்கான பணி ஒரு சில தினங்களில் பூத்தி செய்யப்படும். இதற்கு சுமார் 35 லட்சம் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மருதமுனையின் வரலாற்றுப் பூர்வீக பள்ளிவாசல்களாக காணப்படும் மஸ்ஜிதுல் கபீர், மஸ்ஜிதுல் நூர் ஆகிய பள்ளிவாசல்களில் வாரம் விட்டு வாரம் ஜும்ஆ தொழுகையை நடத்துவதற்கு நாம் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளோம். இது ஊரின் எதிர்காலம் மற்றும் ஒற்றுமையை கருத்திற் கொண்டு செயல்படுவதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அமையும். தற்போது பல பள்ளிவாசல்களிலும் ஜும்மா தொழுகைகள் இடம் பெற்று வருகின்றன இதனை ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட முறைக்குள் கொண்டுவரவேண்டும். இதுதொடர்பிலும் சம்பந்தப்பட்டவர்களிடம் நாம் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளோம் என்று தெரிவித்தார். (05)

## பதில் அறிக்கை....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

குருந்தூர்மலைக்கு கள விஜயம் மேற்கொண்டிருந்த போது, அங்கு இரு தரப்பு சட்டத்தரணிகளுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகர, செல்வராசா கஜேந்திரன், முன்னாள் வடக்குமாகாணசபைஉறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், தண்ணிமுறிப்பு மக்கள், குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் உள்ளிட்டவர்களும் வருகை தந்திருந்தமைகுறிப்பிடத்தக்கது.(02)

## 35இலட்சம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

புதியஆட்சியின்வேலைத்திட்டத்தின் பயனாக கடந்த காலத்தில்நாட்டில்காணப்பட்ட எரிபொருள் வரிசைகளை இல்லாமல் செய்து தொடர்ச்சியாக மின்வெட்டு செய்யப்படுவதையும் தடுக்க முடிந்துள்ளது. கடந்த ஜனவரி மாதத்திலும், ஜூன் மாத்திலும் மின்சார கட்டணத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

வீடுகளுக்காக மின்சாரத்தை பாவனை செய்வோர் எண்ணிக்கை60இலட்சமாக காணப்படுகின்றது. அவர்களில்30-60மின்அலகுகளை பாவனை செய்யும் 35இலட்சம் பேருக்கு 55 ரூபாவினால் கட்டணக் குறைப்புச் செய்யப்பட்டது. அதேபோல் பதிவு செய்யப்பட்டிருக்கும் 40,000 வழிபாட்டுத் தலங்களில் 30 அலகுக்கும் குறைவாக பாவனை செய்யும் 15,000 வழிபாட்டுத் தலங்களுக்கும், தொழிற்துறைகளுக்கும்கட்டணக்குறைப்பு நிவாரணத்தை பெற்றுக் கொடுக்க ஆட்சியாளர்களால் முடிந்தது.

கடந்த காலத்தில் மின்சர சபை409பில்லியன்நட்டமீட்டியிருந்தது. அவற்றில் கடந்த வருடத்தின் நட்டம் மாத்திரம் 167.2 பில்லியன்களாக பதிவாகியிருந்த்து. அதனால் பல்வேறு நெருக்கடிகள் உருவாகியிருந்தன.

எவ்வாறாயினும் தற்போது அனைத்து விநியோகஸ்தர்களுக்குமான கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன. மீள்புதுப்பிக்கத்க்க மின் சக்தி வேலைத்திட்டங்களை புதிதாக ஆரம்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 120 பில்லியன்களை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது. இருப்பினும் இந்த ஆட்சி அந்தத் தொகையைப் பொருட்படுத்தவில்லை.

அதனால் தற்போது மின்சார சபை நிதி ரீதியாக வலுவடைந்துள்ளது கடந்த 03வருடங்களாக கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது வரையில் புதிதாக கோரப்பட்டிருந்த 36,000இணைப்புகளில் 20,000 மின் இணைப்புகள் பெற்றுக்கொடுக்கப் பட்டுள்ளன. அடுத்த இரு மாதங்களில் மிகுதியான மின் இணைப்புக்களும் பெற்றுக்கொடுக்கப்படும்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடந்த வருடம் செப்டம்பர் முதல் கச்சா எண்ணெய் இறக்குமதியை மேற்கொண்டு வந்தது. அதன்படி தொடர்ச்சியாக எரிபொருள் விநியோகத்தை முன்னெடுப்பதற்காக இரு நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களையும் செய்துக் கொண்டுள்ளது.

இம்மாத இறுதிக்குள் விநியோகச்செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியும் என்பதோடு, அவர்களின் முதலாவது எரிபொருள் கப்பல் இம்மாத இறுதியில் இலங்கைக்கு வரவுள்ளது. அதேபோல் அவர்களுக்கு 150 எரிபொருள்நிறுவனங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவர்களது கப்பல் இலங்கைக்கு வந்த பின்னர் சிபெட்கோ என்ற பெயரில் எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டாலும்எதிர்காலத்தில் அவர்களது நிறுவனத்தின் பெயரிலேயே விநியோகிக்கப்படும்.

இந்தநிறுவனங்களுக்கு எரிபொருளை விநியோகிக்கும்போது, ஒரு லீற்றர் எரிபொருளுக்கு 50 ரூபா வரி அறவிடுவதற்கு நிதியமைச்சு தீர்மானித்துள்ளது. அதன் மூலம்இந்தியா, ஈரானிடத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை செலுத்தி முடிக்கும் அதேநேரம் விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கடன்களைவும் விரைவில் செலுத்தி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், பெற்றோலிய கூட்டுத்தாபனம் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய அனைத்து கடன்களையும் செலுத்தியுள்ளது.பெற்றோலிய கூட்டுத்தாபனம்தற்போது நிதி ரீதியாக பலமடைந்துள்ளது. ஆனால் அதன் மறுசீரமைப்புச்செயற்பாடுகள் நிறுத்தப்படமாட்டாது.

மின்சார சபையின் மறுசீரமைப்பு தொடர்பான புதிய வரைவு தற்போது சட்ட வல் லுனர்களிடத்தில் கையளிக்கப்பட்டுள்ளது. வரைவு கிடைத்தவுடன் அதனை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதோடு அமைச்சரவையிலும்சமர்பிக்கப்பட்ட பின்னர்புதிய சட்டத்தை நிறைவேற்றிக்கொள்ளும் இயலுமை கிட்டும்.

இதனால் மின்சார சபை ஊழியர்களுக்கு எந்த நெருக்கடியும் இல்லை. ஹிஏஞ தொழிற் பயிற்சித் தகைமைகளுடன் தற்போது தற்காலிகமாக சேவையில் அமர்த்தப்பட்டுள்ள ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்கவும் எதிர்பார்த்துள்ளோம்.

எரிபொருள் விலை மாற்றத்தின் போது எண்ணெய் கையிருப்புக்களை பேணத் தவறும் எரிபொருள் நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள்எடுக்கப்படவுள்ளது. இன்று(நேற்று) காலை ராஜகிரிய எரிபொருள் நிரப்பு நிலையத்தை அரசாங்கதினால்கையகப்படுத்தப்பட்டது.

எரிபொருள் விலை மாற்றத்தின்போதுஎண்ணெய் கையிருப்பை தக்கவைக்கத் தவறிய 120எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்பிலான முறைபாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அமைச்சு மற்றும் அமை ச்சின் கீழ் உள்ள நிறுவனங்களில் ஊழியர்களின்எண்ணிக்கைபோதுமானதாக இருப்பதால் புதிய ஊழியர்களை சேவையில் இணைத்துகொள்ளாதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியும், பிரதமரும் அரசாங்கமும் இணைந்து எடுத்தசரியானதீர்மானத்தின் பலனாக அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை வினைத்திறனுடன் முன்னெடுக்க முடிந்துள்ளது.

கடந்த காலங்களில் புதுப்பிக்கத்தக்க வலுசக்திக்காக கோரப்பட்ட விலைமனுக் கோரலுக்கான முதலீட்டாளர்கள் இதுவரையில் வரவில்லை. விலைமனுக்களை பெற்றுக்கொண்ட நிறுவனங்களும் வேறு நிறுவனங்களுக்குஅவற்றை விற்றுள்ளன. எனவே, அடுத்த அமைச்சரவை அமர்வின் போது 500 மெகாவோல்ட் புதுப்பிக்கத்தக்க வலுசக்திக்கான விலைமனுக்கோரல் இரத்து செய்யப்பட்டு, புதிய விலைமனுக் கோரல் அறிவிக்கப்படும்.

மேலும்அதானிநிறுவனத்திற்கு 500மெகாவோல்ட் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை தயாரிப்பதற்கானஅனுமதியும் வழங்கப்படவுள்ளது. அடுத்த வருடத்தில்அவர்களது உற்பத்தியை தேசிய மின் கட்டமைப்புக்குள் உள்வாங்குவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் மின்சார சபையை மறுசீரமைக்க வேண்டும் என அந்த நிறுவனங்களின் பெரும்பாலான ஊழியர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். தொழிற் சங்கத் தலைவர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் கிடைக்காமல் போய்விடும் என்ற அச்சத்தினாலேயே அவர்கள் எதிர்ப்பை தெரிவிக்கின்றனர்.

ஆனால் நஷ்டத்தில் இயங்கும் நிறுவனத்தில் சம்பள உயர்வு, மேலதிக கொடுப்பனவு கோரிக்கை என்பவற்றை ஏற்க முடியாது. உலகின் எந்தவொரு நாடும்அவ்வாறு செய்யாது. எனவே அவ்வாறான செயற்பாடுளை நாம் நிறுத்த வேண்டும். 24,000 மின்சார ஊழியர்களுக்கு 3ஆண்டுகளுக்கு ஒருமுறை 25மூ சம்பள உயர்வு வழங்கப்படும். நாங்கள் அதனை நிறுத்தியுள்ளோம்.

செயல்திறனுடன் பணியாற்றும் ஊழியர்களுக்கு மாத்திரமே சம்பள உயர்வை வழங்க முடியும். அனைத்து ஊழியர்களுக்கு சம்பள உயர்வை வழங்கும் நிறுவனங்கள் உலகில் எந்த நாட்டிலும் இல்லை. ஏப்ரல், டிசம்பர் மாதங்களில் வழங்கப்படும் போனஸ் நிறுவனம் இலாபம் ஈட்டினால் மட்டுமே வழங்கப்படும். அதுவும் திறம்பட வேலை செய்யும் ஊழியர்களுக்கு மட்டுமே. ஏப்ரல் மற்றும் டிசம்பர் மாத மேலதிக கொடுப்பனவுகளும் நிறுவனங்கள் இலாபமீட்டினால்மட்டுமேவழங்கப்படும். அதுவும் செயல்திறன் மிக்க ஊழியர்களுக்கு மாத்திரமே வழங்கப்படும்.

இந்திய கடன் உதவியின் கீழ் அரசாங்க நிறுவனங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு சூரிய சக்தி கட்டமைப்புக்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, ஒவ்வொரு வழிபாட்டுத் தலங்களுக்கும் ஐந்து கிலோவாட் சூரிய சக்தியில் இயங்கும் மின் கட்டமைப்பை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அணுசக்தி தொடர்பிலும் கவனம்செலுத்தப்பட்டுள்ளது, அதனை 2023-2042மின் உற்பத்தி திட்டத்தில் இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதன்பலன்களை கருத்திற்கொண்டு நாம் எப்போதுஅணுசக்தித்துறையை வலுப்படுத்துவது என்பது தொடர்பிலான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்-என்றார்.

## வடக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்தபோதுஅவர்இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் கடந்தஆறுமாதங்களில்1,843 பேர்டெங்கு நோயாளிகளாக இனங்காணப்பட்டுள்ளார்கள். இதுவரையில் தென்பகுதியில் இருந்து வந்த ஒருவர் மாத்திரம் டெங்கு தாக்கத்தினால் இறந்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில்1,491பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 65 பேரும் மன்னார் மாவட்டத்தில் 77 பேரும் வவுனியா மாவட்டத்தில்106பேரும்முல்லைத்தீவு மாவட்டத்தில் 104 பேருமாக மொத்தமாக 1,843 பேர் டெங்கு நோய் தாக்கத்துக்குள்ளா கியுள்ளார்கள்.

ஏனைய மாகாணங்களை ஒப்பிடுகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோய் தாக்கம் அதிகமாக காணப்படுகின்றது. யாழ்ப்பாண நகர்ப்பகுதி, நல்லூர், கரவெட்டி பகுதிகளில் டெங்குத் தாக்கம் அதிகளவில் காணப்படுகின்றது

இலங்கையின்ஏனைய மாவட்டங்களிலும் டெங்கு தாக்கம் அதிகளவில் காணப்படுகிறது. குறிப்பாககொழும்பு கம்பஹா மாவட்டங்களில் டெங்கு தாக்கம் அதிகளவில் காணப்படுகின்றது. ஏனைய நகரங்களிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

டெங்குத் தொற்றை குறைப்பதற்குடெங்குபரப்பும் நுளம்புகளை இல்லாது ஒழிக்க வேண்டும். அந்த நுளம்புகள் குறிப்பாக பல்வேறு இடங்களில்பெருகி டெங்கு நோயைப் பரப்புவதனால்டெங்குநோய்தாக்கமானது யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகளவில் ஏற்படுகின்றது.எனவே டெங்கு தொற்றினை தவிர்ப்பதற்கு பொது மக்கள் தமது சுற்றாடலைச் சுத்தமாகவைத்திருந்து முழு ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் - என்றார்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.07.2023இல் வெளியிடப்பெற்றது.